

வடமாகாண
மர நடுகை மாதம்

கார்த்திகை - 2018

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நட வேண்டும்."

-அலெக்சான்டர் சிமித் (ஸ்கொட்லாந்து)


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 345 ஐப்பசி 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 06 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 28 + XVI

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


## ஆனந்தன் எம்.பி. போன்று சோரம் போபவன் நானல்ல

### ரணிலுடன் பேரம் பேசிய ஒலிப்பதிவை வெளியிடத் தயாரா? சவால் விடுகிறார் சரா எம்.பி.

கொழும்பு, நவ. 6
நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறுவதைப் போன்று மகிந்த பக்கம் செல்வது பற்றிச் சிந்திப்பதைக்கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வாழ்வில் ஒருபோதும் கொள்கையைக் கைவிட்டு வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும் விலைபோகக் கூடியவன் நானல்ல என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் >> 25

## நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுவிட்டோம்

*மைத்திரி தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 6
நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கத் >> 22

# தீர்வு வராமல் போனதற்கு முழுப் பொறுப்பும் ரணிலே!

### இப்போது இப்படிச் சாடுகிறார் மைத்திரி

கொழும்பு, நவம்பர் 6
ஆட்சி மாற்றம் இடம்பெற்றும் கடந்த மூன்று ஆண்டுகளாக இனப்பிரச்சினைக்கான தீர்வு வராமல் போனதற்கான முழுப் பொறுப்பையும் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரசிங்கவின் தலையில் சுமத்தியுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. >> 23




## ரணில் மீதான பாலியல் விமர்சனம் மைத்திரிக்கு எதிராக கண்டனங்கள்

கொழும்பு, நவ. 6
கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் பேரணியில் உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவை ஓரினச் சேர்க்கையாளர் என்று பூடகமாகக் >> 23

## அரசியல் கைதிகள் விடுவிப்பு குறித்து இன்னும் பேசுகின்றாராம் மைத்திரி

தென்மராட்சி, நவ.6
மைத்திரியை அரச தலைவராகக்கொண்டுவந்து மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த போதும், அரசியல் கைதிகளை >> 22

## அடுத்த தீபாவளிக்காவது ஒரு தீர்வு வந்து சேரட்டும்

*சம்பந்தன் மன்றாட்டம்*

கொழும்பு, நவ.6
2019ஆம் ஆண்டு வரும் தீபாவளிக்குள்ளாவது தமிழர்களுக்கான >> 25

## பலாத்காரமாக கைப்பற்றப்பட்ட ஆட்சியை முறியடிப்போம்

*ஜே.வி.பி. கூட்டமைப்பு இணைந்து நடவடிக்கை*

கொழும்பு, நவ. 6
பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்ட ஆட்சியை முறியடிக்கும் நடவடிக்கையில், நாட்டில் உள்ள ஏனைய முற்போக்கு சக்திகளையும் ஒன்றுதிரட்டி போராடுவது என்றும், >> 23

## க.குமார் சின்னப் பையன் அவர் சொல்வதை 'சீரியசாக' எடுக்க வேண்டியதில்லை

*கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.*

யாழ்ப்பாணம், நவ. 6
கூட்டமைப்பை வசைபாடுவதைத்தான் அரசியலாகச்செய்பவர் கஜேந்திர >> 25

## கட்சி தாவக் கொடுப்பது சன்மானம் அது இலஞ்சம் அல்ல

வாசுதேவ புது விளக்கம் >> 23

## ஜனநாயகத்தை சவப்பெட்டிக்குள் வைத்து ஆணி அடிக்கப்படுகின்றது

*ரணில் விக்கிரமசிங்க காட்டம்*

(விரிவான செய்தி 4ஆம் பக்கம்)

## தமிழ்பேசும் மக்கள் என்னை நம்பலாம்

தமிழில் உரையாற்றிய மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 6
தமிழ், முஸ்லிம் மக்களை நான் நம்புகின் >> 25

## நாடாளுமன்றத்தை நாளை கூட்ட சபாநாயகர் முயற்சி

### ஒத்துழைக்குமாறு மைத்திரியிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 6
நாட்டில் எழுந்துள்ள நெருக்கடியான நிலமையில் அரச தலைவரின் வாய்மூலமான உறுதி மொழிக்கு அமைவாக நாளை 7ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டி அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதே >> 25

## மகிந்த தரப்பு பெரும்பான்மையை நிரூபிக்கும் வரையில் எதிரணியே!

- ரணிலே தலைமை அமைச்சர்
- அண்மையில் நடந்த மாற்றங்கள் சட்டவிரோதமானது
- அரசமைப்புக்கு முரணாக மைத்திரி செயற்படுகிறார்

இனியும் மௌனமாக இருக்க முடியாது என்று சபாநாயகர் காட்டமான அறிக்கை

(விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

## தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க மகிந்தவுடன் இணைந்து செயற்படுவேன்

### கரு மற்றும் சஜித் தலைமை அமைச்சர் பதவியை ஏற்க மறுத்தார்கள் மைத்திரிபால

கொழும்பு, நவ. 6
வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவும் நானும் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
மைத்திரி மகிந்த அணி >> 23




# புதிய தலைமை அமைச்சருக்கு எதிராக மேல் மாகாண சபையில் பிரேரணை

கொழும்பு, நவ.6

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கி முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை புதிய தலைமை அமைச்சராக நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு மேல் மாகாண சபையில் மக்கள் விடுதலை முன்னணியினர் தனிநபர் பிரேரணையினை முன்வைத்து ள்ளனர்.

மேல்மாகாண சபைக்கூட்டத் தொடரானது ஒரு மாதத்துக்கு இரு தடவைகள் கூட்டப்படும் நிலையில் இம்மாத கூட்டத் தொடரானது நேற்றைய தினம் மேல்மாகாண சபைத்தலைவர் தலைமையில் கூட்டப்பட்டது. அதன்போது ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணியினர், ஜாதிக ஹெல உறுமைய கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் கறுப்பு உடை மற்றும் கறுப்புப் பட்டி அணிந்து சபையில் பிரசன்னமாகினர்.

இந்த நிலையிலேயே மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினரால் மேற்படி புதிய தலைமை அமைச்சரின் நியமனமானது சட்டத்திற்கு முரணானது எனவும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் தனிநபர் பிரணை ஒன்று முன்வைக்கப்பட்டது. அதனை அடுத்து சபையில் பிரசன்னமாகி இருந்த ஆளும் கட்சி தரப்பினரான ஜாதிக்க ஹெல உறுமைய உறுப்பினர்களான நிசாந்த சிறிவர்ண சிங்க மற்றும் நிரோஷ அத்துக்கோரள ஆகியோர் மேற்படி பிரேரணைக்கு தமது ஆதரவைத் தெரிவித்ததை அடுத்து சபை நடுவே எதிர் தரப்பினரால் மகிழ்ச்சிக் கோசங்கள் எழுப்பப்பட்டன .

அதனைத் தொடர்ந்து சபைத் தலைவரால் சபை நடவடிக்கைகள் இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டதுடன் மூன்றாவது தடவையாக சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மகிந்தவின் நியமன மானது சட்டத்திற்கு முரணானது ஆகவே அதற்கு எதிராக முறையான நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஜனநாயகம் நிலை நாட்டப்படவேண்டும் எனவும் கோரி சபையில் தொடர்ந்தும் கோசங்கள் எழுப்பட்டன . ஆகவே , மேல்மாகாணசபையின் கூட்டத்தொடரானது எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு சபைத் தலைவரால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(21)

## மைத்திரிக்கு சபாநாயகர் ஒத்துழைக்க வேண்டும்

கொழும்பு. நவ.6

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சபாநாயகர் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற சுற்று வட்டப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அரச ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு சபாநாயகர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், அலரிமாளிகை தற்போது அங்கீகரிக்கப்படாத ஒரு இடமாக காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (21)

## சபாநாயகர் சிறைக்குச் செல்ல நேரிடும்

### மகிந்த அணி எச்சரிக்கை

கொழும்பு. நவ.6

அரசதலைவரின் உத்தரவையும் மீறி நாடாளுமன்றதைக் கூட்டினால், சபாநர்யகர் சிறைக்குச் செல்ல நேரிடும் என, முன்னாள் சபாநாயகர் டபிள்யூ.யே.எம். லொக்குபண்டார எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

மகிந்த அரசுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'இலங்கை அரசமைப்புக்கு உட்பட்டே அரச தலைவர் புதிய தலைமை அமைச்சரை நியமித்தார். அரச தலைவர் அரசியலமைப்பினை மீறிவிட்டார் என்று கூறும் குற்றச்சாட்டு க்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசிதழ் அறிவித்தலையும் மீறி நாடாளுமன்றத்தைத் சபாநாயகர் திறந்தால் சிறப்புரிமைச் சட்டத்துக்கு அமைய அவர் சிறைக்குச் செல்ல நேரிடும்.

பொய்யான ஒரு சாவியைக் கொண்டு நாடாளுமன்றத்தைத் திறக்க முடியாது - என்றார். (21)

## பெரும்பான்மையை நிரூபித்த பின் சிறிகொத்தாவில் பிளவுகள் ஏற்படும்

### ரோகித அபேகுணவர்தன எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, நவ.6

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை அரசு நிரூபித்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் பாரிய பிளவுகள் ஏற்படும் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்தன, கட்சியின் தலைமைத்துவத்திற்காக கட்சிக்குள்ளே பாரிய நெருக்கடி ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

பொதுசன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது

பொதுஜன பெரமுனவும் , சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஒன்றினைந்தே தற்போது அரசியல் ரீதியில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஒரு போதும் தனிமைப்படுத்தமாட்டோம் ஒன்றிணைந்தே எதிர்வரும் தேர்தல்களை எதிர்க்கொள்வோம். அத்துடன், எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுகின்ற போது புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவை வரவேற்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடு க்கப்படும் - என்றார்.

(21)

## மைத்திரியின் தீர்மானத்துக்கு எதிராக சபாநாயகர் செயற்பட்டால் நடவடிக்கை

### அரசு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 6

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அரசிதழுக்கு மாறாக சபாநாயகர் கரு ஜயசூரிய செயற்பட்டால், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை ஏற்றுக் கொள்ளாவிடடால் அவர் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இவ்வாறு அரசின் அமைச்சர்கள் நேற்றுப் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டபோதும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 14ஆம் திகதியே நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று அறிவித்துள்ளார். இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள சபாநாயகர், அரச தலைவர் மைத்திரிபால வாய்மொழி மூலம் தெரிவித்ததற்கு அமைவாக நாளை புதன் கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டவுள்ளதாக அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கை, அரசைக் கடுமையாகச் சீண்டியுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த விவகாரம் எதிரொலித்தது.

இது தொடர்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று மதியம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், அமைச்சர்களான சரத் அமுனுகம, விஜயதாச ராஜபக்ச, மகிந்த சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் கருந்து வெளியிட்டனர்.

சரத் அமுனுகம, சபாநாயகர் கட்சி ரீதியாகவும் கட்சிக்கு ஆதரவாகவும் அறிக்கை வெளியிடுவது அரசமைப்புக்கு எதிரானது. இந்த அறிக்கையை கண்டிக்கின்றோம் என்றார்.

இதேவேளை, அரசியல் ரீதியான நெருக்கடியாக நிலமையை நாட்டுக்குள் ஏற்படுத்தும் விதமாக இந்த அறிக்கை சபாநாயகரினால் வெளியிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த, மகிந்தவை தலைமை அமைச்சராக ஏற்றுக் கொள்ளாவிட்டால் சபாநாயகர் பாரதூரமான விளைவுகளை எதிர் கொள்ளவேண்டியிருக்கும். ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையிலிருந்து வெளியேற மறுத்தால் மக்கள் வெளியேற்றுவார்கள் என்றார்.

(5)

## நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைப்பு: மைத்திரியின் முடிவை சவாலுக்குட்படுத்த முடியாது!

### உயர்நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, நவ.6

நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைப்பதற்காக அரச தலைவரால் வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிப்பை இடைநிறுத்துமாறு கோரி உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீதான மனுவுக்கு எதிராக அடிப்படை எதிர்ப்பு தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் நேற்று உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

அரச தலைவரால் வெளியிடப்பட்ட அறிவிப்பால் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனு மூலம் அரசிதர் அறிவிப்சபை வாலுக்கு உட்படுத்த முடியாதென்றும் சட்டமா அதிபருக்குப் பதிலாக முன்னிலையான மேலதிக சொலிஸ்ரர் ஜெனரல் இந்திக தெமுனி டி சில்வா உயர்நீதிமன்றத்தில் அறிவித்தார். மேலும் இந்த மனு உயர்நீதிமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை என்றும் அவர் மன்றில் சுட்டிக்கா ட்டினார்.

நேற்றயதினம் இந்த மனு முதன்மை நீதியரசர் நளின் பெரேரா நீதியரசர்களான சிசிர டி ஆக்குறூப் மற்றும் விஜித் மலலகொட ஆகியோர் அடங்கிய 3 நீதிய ரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதியரசர் விஜித் மலலகொட இல்லாததால் நீதியரசர் குழுவில் இதனை எடுத்துக்கொள்வதற்காக காலஅவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மனு மூலம் கோருமாறு உயர் நீதிமன்றத்தில் மனுதாரர் தெரிவித்திருந்தார். இந்த மனுவை சட்டத்தரணி நாகாநந்த கொடிதுவக்கு தாக்கல் செய்திருந்தார். நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டிருருப்பதால் நாட்டில் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாகவும் மனுதாரர் இந்த மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். பிரதிவாதிகளாக இந்த மனுவில் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் சட்டமா அதிபர்கள் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. (21)

## அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல் ரணில் விலகிக் கொள்ள வேண்டும்

### ஜி. எல். பீரிஸ் வேண்டுகோள்

கொழும்பு. நவ.6

நாட்டின் பொருளாதாரத்தை மழுங்கடிக்கும் சூழ்ச்சிகளை விடுத்து அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல் ரணில் விக்ரமசிங்க விலகிக்கொள்ள வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் ஊடாக தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முயற்சித்த நாடுகளே இன்று ஆட்சி மாற்றத்திற்கு எதிராக செயற்படுகின்றனர்.

மக்களின் விருப்பத்திற்கு அமையவே ஆட்சி மாற்றம் இடம் பெற்றுள்ளது. அரச சொத்தை முறையற்ற விதத்தில் பாவித்துள்ளமை தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

நாடாளுமன்றத்தில் ஒரு முடிவைப் பெற்றதன் பின்னரே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். அரசின் பெரும்பான்மையினை நாடாளுமன்றத்தில் 113 ஐக் காட்டிலும் 120 ஆக நிரூபிப்போம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள முக்கிய தரப்பினர்கள் எம்மிடம் தாமாகவே இணைந்து கொண்டனர். அவர்கள் கடந்த காலத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கொள்ளைகளுக்கு அமைவாகச் செயற்பட்டவர்கள் என்ற ரீதியில் இணைந்துகொள்கின்றனர்-என்றார். (21)

# மகிந்த தரப்பு பெரும்பான்மையை நிரூபிக்கும் வரையில் எதிரணியே!

- ரணிலே தலைமை அமைச்சர்
- அண்மையில் நடந்த மாற்றங்கள் சட்டவிரோதமானவை
- அரசமைப்புக்கு முரணாக மைத்திரி செயற்படுகிறார்

## இனியும் மௌனமாக இருக்க முடியாது என்று சபாநாயகர் காட்டமான அறிக்கை

கொழும்பு, நவ. 6

நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ச தனது பெரும்பான்மையை நிரூபிக்கும்வரை அவருக்கு தலைமை அமைச்சர் ஆசனத்தை வழங்கப் போவதில்லை. நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது அதன் அமர்வுகள் நிறுத்தப்பட்டவேளை காணப்பட்ட நிலையே தொடரும். தற்போதைய அரச உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்வார்கள். நாடாளுமன்றத்தில் சமீபத்தில் இடம்பெற்ற மாற்றங்கள் சட்டவிரோதமானவை. பெரும்பான்மை உறுப்பினர்கள் எனக்கு வழங்கிய கடிதத்தைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய காட்டமான அறிக்கையை நேற்று விடுத்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய கடந்த முதலாம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார். இதன்போது இந்த வாரம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு மைத்திரிபால இணங்கியிருந்தார். இந்தச் சந்திப்புக்கு மறுநாள், சபாநாயகர் அலுவலகம் விடுத்த ஊடக அறிக்கையில், மகிந்த ராஜபக்சவுக்கு நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் ஆசனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அரச தலைவர் மைத்திரிபால இந்த வாரம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காமல், அடுத்த வாரம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்காக அரசிதழ் அறிவிப்பை நேற்று முன்தினம் வெளியிட்டார். இதனையடுத்து சபாநாயகர் நேற்றுக் காலை இந்தக் காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சபாநாயகரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**மௌனித்திருக்க முடியாது**

நாடு என்றும் இல்லாத ஒரு நெருக்கடியான சூழலைச் சந்தித்துள்ளது. சபாநாயகர் என்ற வகையில் நாடு எதிர்கொண்டுள்ள இந்த நிலைமையில் மௌனித்து இருக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் இதுவரை காலமும் பாதுகாத்து வந்த நாட்டின் ஜனாநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளை கண்டித்து அதற்கு எதிராக செயற்பட வேண்டியது என்னுடைய தேசியக் கடமையாக கருதுகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 116 பேர் கையொப்பமிட்டு அரச தலைவரின் தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது என்று குறிப்பிட்டுள்ளதுடன் நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டி நடவடிக்கை எடுக்குமாறு நியாயமான கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

**மோசமான பாதிப்பு**

நாட்டில் ஜனநாயகம் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. அரச ஊடகங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பு பலவந்தமாக கைப்பற்றப்பட்டுள்ளது. மறுபுறம் மக்கள் பிரதிநிதிகளுக்கு வரப்பிரசாதங்கள் வழங்கி தன் பக்க ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை குறித்த வெளியான தகவல்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளாது வேடிக்கை பார்ப்பது சபாநாயகர் என்ற வகையில் முறையானது அல்ல.

நாடாளுமன்ற அமர்வை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை தடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக பெரும்பான்மை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ள இந்தத் தருணத்தில்நீதியையும்நியாயத்தையும் உலகுக்கு வெளிப்படுத்துவது எனது கடப்பாடாகும்.

நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்தும் அரசமைப்புக்கு முரணானது என்பதோடு நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கும் எதிரானது என்பதே பெரும்பான்மை உறுப்பினர்களின் நிலைப்பாடாகும். மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னரான நிலைமையே உறுதிப்பாடானது என்பது பெரும்பான்மையான உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். புதிய தரப்பினர் பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை முன்னதான நிலைமையே கருத்தில் கொள்ளப்படும் என்றுள்ளது. (5)




சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. வாகனம் ஒன்றில் அழைத்து வரப்பட்ட சுமார் 15பேர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (5)

## சபாநாயகர் வார்த்தையை மீறி சபை முதல்வராக தினேஸ்; பதவியேற்பு!

கொழும்பு, நவ. 6

நாடாளுமன்றம் முடக்கப்படுவதற்கு முன்னர் இருந்த நிலையையே ஏற்றுக் கொள்வதாக சபாநாயகர் அறிவித்திருந்த நிலையில், சபை முதல்வராக தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார். சபை முதல்வராக லக்ஸ்மன் கிரியெல்ல தொடர்ந்தும் பதவியில் இருப்பதாகத் தெரிவித்துள்ள நிலையிலேயே தினேஸ் குணவர்த்தன நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். ஏற்கனவே தலைமை அமைச்சராக மகிந்த நியமிக்கப்பட்ட நிலையில், சட்டரீதியான தலைமை அமைச்சர் தானே என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வருகின்றார்.

தற்போது நாட்டில் இரண்டு சபை முதல்வர்கள், தலைமை அமைச்சர்கள் இருக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கின்ற அதனை ஆதரிக்கின்ற அரசியற் கட்சித் தலைவர்களுடன் கடந்த மூன்றாம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது சபை முதல்வராக தினேஸ்; குணவர்த்தன நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் உள்ள சபை முதல்வர் அலுவலகத்தில் அவர் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதேவேளை அரசிதழ் அறிவிப்புக்கு அமைவாகவே தாம் செயற்படுவோம் என்று நாடாளுமன்ற ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். அதன் காரணமாகவே தினேஸ் குணவர்த்தனவுக்கு, நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதி கதவுகளை திறந்து விட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் உள்ள பணியாளர்கள், பொலிஸாருக்கு தலைவராக சபாநாயகரே அதிகாரமிக்கவராக விளங்குகின்றார் என்பதை ஏற்றுக் கொள்கின்ற போதும், அரசிதழ் அறிவிப்பின்படியே தாங்கள் செயற்படுவோம் என்று அவர்கள் கூறியுள்ள னர். (5)



## ஐ.தே.க. எம்.பிக்கள் கைதாகி விடுதலை

கொழும்பு, நவ. 6

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹேசான் விதானகே மற்றும் பாலித தெவரப்பெரும ஆகியோர் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டு சில மணி நேரங்களில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அலரி மாளிகைக்கு அருகில் வைத்து மேஜர் அஜித் பிரசன்னவை தாக்கிய சம்பவம் தொடர்பில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த வேளையிலேயே கைது செய்யப்பட்டனர். கோட்டை நீதிமன்றில் முற்ப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். (5)

## தேசிய கீதத்தின் போது கையசைத்த மைத்திரி

இலங்கையின் தேசிய கீதம் ஒலித்துக் கொண்டிருந்த போது ஆதரவாளர்களுக்கு கைகாட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. இந்தக் கானொளி சமூக வலைத்தளங்களில் நேற்று பேசுபொருளானது.

அரச ஆதரவுக் கூட்டம் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற போதே அரச தலைவர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார். அரச தலைவருடைய இந்தச் செயற்பாட்டை புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தடுப்பது போன்று அந்த காணொலி அமைத்துள்ளது. (21)

## பன்னாடுகளும் ஒதுக்கிய நபர் தலைமை அமைச்சராம்

*முஜிபுர் எம்.பி காட்டம்*

தேசிய அரசின் கீழ் பன்னாடுகளின் உறவுகள் இலங்கைக்கு கிடைக்பெற்றுள்ளதாக குரல் எழுப்பிய அரசதலைவர், மைத்திரி பன்னாடுகளும் ஒதுக்கிய நபரை தலைமை அமைச்சராக தெரிவு செய்துள்ளார் எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இது தொடர்பில் அரச தலைவர் பன்னாடுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் கூறினார்.நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைக்கு ஒரே தீர்வு நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும், ஆகவே சபாநாயகர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாக நாடாளுமன்றைக் கூட்ட வேண்டும் .நாடாளுமன்றத்தின் கதவுகள் திறக்கப்பட்டு ஜனநாயகம் நிலை நாட்டப்படும் வரை ஐக்கிய தேசிய முன்னணியின் போராட்டம் நிறைவுக்கு வராது என்றும் எச்சரிக்கை விடுத்தார். (21,26)

# மைத்திரியின் முடிவின் விளைவு ஜெனிவாவில் எதிரொலிக்கும்!

## பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிப்பு

கொழும்பு, நவ. 6
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது எடுத்துள்ள முடிவு, அடுத்த ஜெனிவா அமர்வில் இலங்கையைப் பாதிக்கும் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தலைமை அமைச்சரை மாற்றியமை, நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமை அரசமைப்புக்கு முற்றிலும் முரணானதென்றும், சட்டவிரோதமானதென்றும், ஜனநாயக மீறலுமாகும். இதனால் பொருளாதாரம், நாட்டின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை என்பன குறைவடைந்துள்ளது. விரைவில் நாடாளுமன்றத்தைக் கூட்டி இதற்குத் தீர்வுகாண வேண்டும்.
அது மாத்திரமன்றி, அரசியல் உறுதிப்பாடற்ற நிலையிலுள்ள நாடு என்று இலங்கை முத்திரை குத்தப்பட்டு, அதனால் நாட்டின் பொருளாதாரம் கீழ்மட்டத்துக்குச் செல்லும். எதிர்வரும் 5 மாதங்களில் பின்னர் இடம்பெறும் ஜெனிவா அமர்வில் இலங்கையின் தற்போதைய நிலை பாதிப்பை ஏற்படுத்தும். அது இலங்கைக்குப் பின்னடைவாக அமையும் - என்றார். (5)

## ஜனநாயகத்தை சவப்பெட்டிக்குள் வைத்து ஆணி அடிக்கப்படுகின்றது

### ரணில் விக்கிரமசிங்க காட்டம்

கொழும்பு, நவ. 6
நாடாளுமன்றக் கூட்டத் தொடரைப் பின்தள்ளிப்போடுவதால் நாட்டின் ஜனநாயகத்தைச் சவப்பெட்டிக்குள் வைத்து ஒவ்வொரு ஆணிகள் அடிக்கப்பட்டுக்கொண்டிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால அரசிதழ் அறிவிப்பு வெளியிட்ட பின்னர், ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
"நாட்டு மக்களின் இறைமை ஒவ்வொரு நாளும் அழிக்கப்படுகின்றது. நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும்.
இதேவேளை, நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான நாள்கள் பின்னுக்குத் தள்ளப்படுவதனால், நாட்டின் ஜன நாயகத்தை சவப்பெட்டியொன்றுக்குள் போட்டு ஆணிகளை அடித்துக்கொண்டிருக்கின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# ரணில் இல்லாத கூட்டு அரசு மைத்திரிபால - ராஜித பேச்சு!


**கொழும்பு, நவ. 6**
**ரணில் விக்கிரமசிங்க இல்லாத அரசை ஏற்படுத்துவது தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் ராஜித சேனரட்னவும், ஜோன் அமரதுங்கவும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசியப் பேச்சுகளை நடத்தியுள்ளனர் என்று கொழும்பு ரெலிகிராவ் தெரிவித்துள்ளது.**

மகிந்த ராஜபக்சவின் தலைமையில் ஆட்சியமைக்கும் முயற்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் சிறிசேன தனது அடுத்த கட்ட திட்டத்தை முன்னெடுத்துள்ளார் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பொது எதிரணியில் ஒரு பகுதியினர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினரை உள்ளடக்கிய அரசை அமைப்பதற்குச் சிறிசேன முயல்கின்றார்.
ராஜித சேனரட்னவும், ஜோன் அமரதுங்கவும் சிறிசேனவைச் சந்தித்து இரகசியப் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர். தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்காகப் புதிய கூட்டு அரசை அமைப்பது குறித்து அவர்கள் ஆராய்ந்துள்ளனர். ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சமமான அமைச்சரவை ஆசனங்களை ஒதுக்குவது குறித்தும் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.
ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரையும் தலைமை அமைச்சர் பதவிக்கு நியமிப்பதற்கு சிறிசேன இணங்கியுள்ளார். சஜித் பிரேமதாசாவுக்கு தலைமை அமைச்சர் பதவியை வழங்கத் தயார் எனவும் சிறிசேன தெரிவித்துள்ளார் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (5)

## பின்கதவால் வந்த ராஜபக்ச தன் பலத்தை நிரூபிக்கட்டும்

### ரோசி சேனநாயக்க சவால்

கொழும்பு,நவ.6
நாட்டு மக்களின் 62 இலட்சம் வாக்குகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியில் அமர வைத்தது, இவ்வாறு அரச தலைவர் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் தலைமை அமைச்சராக்குவதற்கு அல்ல எனத் தெரிவித்த கொழும்பு மாநகரசபையின் முதல்வர் ரோசி சேனாநாயக்க பின்கதவினால் வந்த மகிந்த ராஜபக்ச தனது பலத்தை நாடாளுமன்றில் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார்.
கொழும்பு புதிய நகர மண்டபக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஐ.தே.க. நாடாளுமன்ற, கொழும்பு மாநகர சபை மற்றும் ஐ.தே.க. ஆதரவாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"கடந்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபாலவுக்கு மக்கள் வாக்களித்தது மீண்டு மகிந்தவை ஆட்சிக் கதிரையில் அமர வைக்க அல்ல. 18ஆம் அரசமைப்பின் மூலம் சர்வதிகாரியாகச் செயற்பட்ட முன்னாள் அரச தலை வர் மகிந்தவைத் தேர்தலில் தோற்கடித்து மக்கள் அரச தலைவர் மைத்திரிபாலவிடம் நாட்டை ஒப்படைத்தனர்.
இதற்கு அவர் மக்களை ஏமாற்றி மீண்டும் நாட்டை ஒரு சர்வதிகாரியின் கரங்களில் ஒப்படைத்துள்ளார்.
அன்று அரச தலைவர் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தலைமை அமைச்சர் பதவி வழங்கப்படும் என்பதினாலலேயே மக்கள் இவருக்கு வாக்களித்தனர்.
ஆனால் இன்று அவரோ மக்களின் வாக்குகளை ஏமாற்றிச் சட்டத்துக்கும், அரசமைப்புக்கும் முரணாகத் தலைமை அமைச்சரை நியமித்துள்ளார்.
இதற்கு சமய தலைவர்கள், பன்னாடு, நாட்டு மக்கள் என அனைத்து தரப்பிலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது.
இன்றைய அரசியல் நிலைமை எமது சந்ததியினரின் எதிர்கால வாழ்க்கையில் விளையாடும் செயலாகியுள்ளது.
மக்கள் வாக்களித்து ஆட்சியில் அமருவதை விடுத்து இவர்கள் இன்று காசு கொடுத்து உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.
இவ்வாறான அரச தலைவர் மைத்திரியின் மாற்றம் எமது நாட்டுக்குப் பொருளாதார தடைவிதிப்பையும், ஜி.எஸ்.பி. சலுகை மறுப்பையும் பன்னாட்டு மத்தியில் அபகீர்த்தியையும் ஏற்படுத்தியுள்ளது.
இதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி பெரும்பான்மையை நிரூபித்துச் சட்டத்துக்குட்பட்ட ஆட்சியை அமைக்க முன்வரவேண்டும்- என்றார்.


(நன்றி: அவந்த)

## மகிந்தவின் மீள் வருகையால் டில்லி மகிழ்ச்சியடையவில்லை

### இந்திய முன்னாள் இராஜதந்திரி பேராசிரியர் முனி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 6
புதுடில்லிக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் எந்தவிதமான பரஸ்பர நம்பிக்கையோ புரிந்துணர்வோ கிடையாது. ராஜபக்சவின் மீள் வருகையையிட்டு இந்தியா நிச்சயம் மகிழ்ச்சியடையவில்லை. இவ்வாறு இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியும், தெற்காசிய விவகாரங்களுக்கான நிபுணருமான பேராசிரியர் எஸ்.டி.முனி தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகம் ஒன்றில் வெளியாகியுள்ள கட்டுரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
"வெளிப்படையாக எதையும் கூறாவிடினும், ராஜபக்சவின் மீள்வருகை இந்தியாவுக்கு நிச்சயம் மகிழ்ச்சியை அளிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ( புதுடெல்லியின்) அமைதியான ஆதரவு உள்ளது.
கடந்த கால அனுபவம், சீனா விடயத்தில் மாத்திரமன்றி நன்றாக இருக்கவில்லை. தமிழர் பிரச்சினை உள்ளிட்ட இந்தியா எதிர்பார்த்த எதையும், ராஜபக்ச நிறைவேற்றவில்லை.
புதுடில்லிக்கும், ராஜபக்சவுக்கும் இடையில் நம்பிக்கையோ, புரிந்துணர்வோ கிடையாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## அரசுப் பக்கம் தாவியவருக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு,நவ.6
சிலாபம் - நாத்தாண்டிய பகுதியிலுள்ள பிரதி அமைச்சர் அசோக்க பிரியந்தவின் வீட்டுக்குச் சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக்க பிரியந்த, புதிய அரசுடன் இணைந்துக் கொண்டு நேற்று முன்தினம் பிரதி அமைச்சு பொறுப்பொன்றைப் பெற்றுக் கொண்டிருந்தார்.
இதனையடுத்து நாத்தாண்டிய - மரத பகுதியிலுள்ள அசோக்க பிரியந்தவின் வீட்டுக்கு முன்பாக சிலர் ஒன்று திரண்டு, எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இவ்வாறு ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து, பிரதி அமைச்சர் வீட்டுக்குச் சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மாரவில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று, பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பீல்ட் மார்சல் பட்டத்தை மைத்திரி நீக்கமுடியாது!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு,நவ.6
பீல்ட் மார்சல் பட்டத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் காணப்படுகின்ற போதும், அதனை நீக்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் பீல்ட் மார்சல் பட்டத்தைப் பறிக்க அரச தலைவர் ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், கம்பகாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த சரத் பொன்சேகாவிடம் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறுதி போரின்போது இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த சரத் பொன்சேகாவுக்கு, போரின்போது அவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டி பீல்ட் மார்சல் பட்டம் வழங்கப்பட்டது. கூட்டாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன் இந்தப் பட்டத்தை வழங்கி வைத்ததோடு, இலங்கையில் இந்தப் பட்டத்தை பெற்ற முதலாவது நபர் என்ற பெருமையும் சரத் பொன்சேகாவையே சாரும்.

எனினும், அரச தலைவர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை கொலை செய்யத் சதித்திட்டம் தீட்டப்பட்டதில் சரத் பொன்சேகாவுக்கும் பங்குண்டு என அண்மைய காலமாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அதன் பின்னணியில், சரத் பொன்சேகாவின் பீல்ட் மார்சல் பட்டத்தை நீக்க அரச தலைவர் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# எம்.பிக்களை விலைகொடுத்து வாங்க பணத்தை அச்சிடுகிறார் மைத்திரிபால

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 6
**நாடாளுமன்றத்தைக் கூட்டாது அரசமைப்பை மீறி ஜனநாயகத்துக்கு விரோதமான ஆட்சியைக் கொண்டுசெல்லும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தரப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்குவதற்குத் தற்போது பணத்தை அச்சடிக்க ஆரம்பித்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹரின் பெர்ண்ான்டோ தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இதுவரை 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த பக்கம் தாவியுள்ள நிலையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தியாகங்களைச் செய்து நாட்டில் உருவாக்கிக்கொண்டிருந்த கூட்டாட்சியை ஜனநாயகத்தையும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரே இரவில் குழிதோண்டி புதைத்துவிட்டார். சட்டவாட்சியை மீறி ஜனநாயகத்துக்கு விரோதமான சூழ்ச்சி அரங்கேறிய ஆட்சி 10 நாள்களை எட்டியுள்ளது. இதன் காரணமாக மெல்ல மெல்ல கட்டியெழுப்பட்டுவந்த பொருளாதாரம் பெரிய வீழ்ச்சியை நோக்கி நகர்ந்துள்ளது. அரச திணைக்களங்கள் முடங்கியுள்ளன. இன்னமும் 50 வார ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள அரச தலைவர் நாட்டையும், மக்களையும் பகடைக்காயாகப் பயன்படுத்தியுள்ளார். எமது நாட்டுக்கு எதிராகப் பன்னாட்டு அழுத்தங்கள் மீண்டும் வலுவடைந்து வருகின்றன. நாடாளுமன்றத்தைக் கூட்டாது உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்க இன்று பணத்தையும் அச்சடிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கலாசாரத்தில் இருந்துதான் நாங்கள் நாட்டை மீட்டெடுத்திருந்தோம். கடன் சுமைகளைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தோம். ஆனால், தமது இருப்புக்காக நாட்டின் பொருளாதாரத்தையும் அரச தலைவர் கேள்விக்குறியாக்கியுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பொது வேட்பாளரைக் களமிறக்காது என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தமையே அரச தலைவர் எமது ஆட்சியைக் கவிழ்க்க சதித்திட்டத்தை முன்னெடுத்துள்ளார். திருடர்களுடன் திருடர்கள் சேர்ந்துள்ளமையே யதார்த்தமான உண்மை - என்றார். (5,10)

# எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்தமையால் சபையில் அமைதியின்மை

கொழும்பு,நவ.6
மேல்மாகாண சபை அமர்வின்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருவர் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ளமையால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த நிஷாந்த சிறிவர்ணசிங்க மற்றும் நிரோஷா அத்துகோரள ஆகிய இருவருமே இவ்வாறு எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்தனர்.

இதனையடுத்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டு அமர்வினை 15 நிமிடம் பிற்போடுவதற்குத் தலைவர் சுனில் விஜேரத்ன தீர்மானித்தார்.

குறித்த இரு உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமர்ந்ததை அடுத்து ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் எழுந்து நின்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக் களை முன்வைத்ததை அடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்களும் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

# போரைக் காட்டிலும் நிலமை மோசம்

## பன்னாட்டு இராஜதந்திரி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 6
இலங்கை கடந்த காலத்தில் எதிர்கொண்டிருந்த போர் நிலமைகள் மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கூட தற்போதுள்ள நிலையினைப் போன்றதொரு மிக மோசமான அரசமைப்பு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கவில்லை. இவ்வாறு அல்ஜீரியாவின் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும், ஐ.நா. இராஜதந்திரியுமான லக்தர் பிரஹிமி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் 30 ஆண்டுகாலப் போர் நிலமைகளின் போது கூட தற்போதுள்ள நிலையினைப் போன்றதொரு மோசமான அரசமைப்பு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கவில்லை.

நாட்டின் தலைவர்கள் அரசமைப்புச் சட்டத்தின் மாண்புகளைப் பாதுகாப்பதுடன், நாடாளுமன்றத்தின் ஜனநாயகத் தன்மையினையும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, நியாயத்துவம் என்பன காணப்பட வேண்டும். மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (5)



# சிறுபான்மைக் கட்சிகள் ஒரே அணியில் பயணிப்பது காலத்தின் தேவை

## கூறுகின்றார் இம்ரான் எம்.பி

கொழும்பு,நவ.6
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குள் சிறுபான்மைக் கட்சிகள் ஒரே அணியில் பயணிப்பது காலத்தின் தேவை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் வைத்து நேற்று ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பான்மை இனவாத சக்திகள் இணைந்து மேற்கொண்ட சதியின் மூலமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச அரசமைப்புக்கு முரணாக தலைமை அமைச்சாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆகவே இவர் தலைமை அமைச்சராக நீடித்து ஆட்சியை மேற்கொண்டால் சிறுபான்மை சமூகம் எதிர்நோக்க நேரிடும் இன்னல்களைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக வாக்களிப்பதுக்கு எடுத்த தீர்மானத்தை வரவேற்கின்றேன் .

இவ்வாறு தமிழ்தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி போன்ற சிறுபான்மை கட்சிகள் ஒரே பாதையில் பயணித்து ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசு ஒன்றை அமைக்குமிடத்து பெரும்பான்மை இனவாத சக்திகளால் சூழ்ந்துள்ள மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை போல் அல்லாமல் எமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளலாம் - என்றார். (40)

# தேர்தலுக்கு நாங்கள் தயார் ஐ.தே.கவே பின்னடிக்கிறது

## வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, நவ.6
அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாங்கள் பொதுத் தேர்தலுக்குச் செல்லத் தயாராக இருக்கின்றோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்குப் பின்வாங்குகின்றது. இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

அவர்கள் தேர்தலுக்கு முகம் கொடுக்க அச்சப்படுகின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் சட்டரீதியிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதை யாரேனும் சவாலுக்குட்படுத்துவதாக இருந்தால் நீதிமன்றம் சென்று தீர்த்துக் கொள்ளலாம்.

மக்கள் ஆணையுடன் அரசு அமைப்பதற்காக நாங்கள் தேர்தலுக்குச் செல்லத் தயராக இருக்கின்றோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதைத் தவிர்க்கின்றது- என்றார்.(ற)

## நாடாளுமன்றம்

# நாளை கூடும் அறிவிப்பை மைத்திரி விடுக்கவேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசமைப்பின் பிரகாரம் செயற்படவில்லை என்பதை சபாநாயகர் கரு ஜயசூரிய தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அரசமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவையே தலைமை அமைச்சராக நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்பதையும் தெளிவுப்படுத்தியுள்ளார். நாட்டின் அரசியல் நெருக்கடிகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண்பதற்கு நாளை புதன்கிழமை நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான அறிவிப்பை அரச தலைவர் வெளியிட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,


தலைமை அமைச்சரை நீக்குவதற்கு அரச தலைவருக்கு அதிகாரம் உள்ளதா? இல்லையா? என்பது தொடர்பில் சபாநாயகர் அதற்குத் தெளிவான பதிலை இன்று (நேற்று) வெளியிட்டுள்ளார். அரசமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவே நாடாளுமன்ற பெரும்பான்மையை உறுதிப்படுத்தியுள்ளார்.

26ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய கடைப்பிடித்த முறைமையே வேறு ஒருவர் பெரும்பான்மையை நிரூபிக்கும்வரை கடைப்பிடிக்க முடியுமென விளக்கப்படுத்தியுள்ளார்.

செல்லுபடியற்ற அரசும், செல்லுப்படியற்ற தலைமை அமைச்சரும் விடுக்கும் உத்தரவுகளை அரச நிறுவனங்கள் நிறைவேற்றக் கூடாது என்றார். (5.10)

### “பிளாஸ்ரிக்கைத்தடுத்தல்”தொனிப்பொருளில்

# சுத்தமாக்கப்பட்டது மூர்க்கம் கடற்கரை



**யாழ்ப்பாணம், நவ. 6**

**வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் 'பிளாஸ்டிக் கழிவுகளைக் கடலுக்குள் செல்ல விடாமல் தடுத்தல்' என்ற தொனிப் பொருளில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்தின் கீழ் மூர்க்கம் கடற்கரை சுத்தமாக்கப்பட்டது.**

குறித்த கடற்கரையைச் சுத்தமாக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன. கிராமமக்கள், வடமராட்சி நல்லொழுக்க ஊழியர்கள், இளைஞர்கள், நகரசபை உறுப்பினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள்ஒன்றுதிரண்டு கடற்கரையைத்தூய்மைப்படுத்தினார்கள். ஐக்கிய அமெரிக்காவின் பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனமான யு.எஸ்.எய்ட்நிறுவனத்தின்நிதிப்பங்களிப்புடன்இந்தத்திட்டம்மேற்கொள்ளப்பட்டது.

"பிளாஸ்ரிக்கால்மனிதர்கள்மட்டுமல்ல கடல் வாழ் உயிரினங்களும் பெரும் துன்பத்தையும் அழிவையும் எதிர்கொண்டுவருகின்றன. ஐக்கியநாடுகள் சபை" பிளாஸ்ரிக்கால்கடல்வாழ் உயிரினங்களுக்கும்கடல்வளங்களுக்கும் ஏற்படும் சேதத்தை வெளிப்படுத்தும் வகையில் அண்மையில் குறும்படமொன்றை வெளியிட்டது. லட்சக்கணக்கானஉயிரினங்கள்சாவடைவதற்கு பிளாஸ்ரிக் காரணமாக இருக்கிறது என்ற செய்தி மனதைக் கலக்கமடையச்செய்தது. அனைத்துமக்களும் ஒன்றுதிரண்டுதமக்கு அருகில் உள்ள கடற்கரையைச்சுத்தத்துடனும்பிளாஸ்ரிக் இல்லாமலும் இருக்க ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மூர்க்கம் கடற்கரை சுத்தமாக்கப்பட்ட விடயம் முன்னுதாரணமாக அமையட்டும்'' என்று துப்புரவாக்கல் பணியில் ஈடுபட்ட இளைஞரொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.



## திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

கொடிகாமம், நவ. 6

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்தேசிய வாசிப்புமாதத்தையொட்டிமாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை, கழிவுப் பொருளாக்கம்போன்றபோட்டிகளில்வெற்றியீட்டியமாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கல்லூரி நூலகத்தினரால் நாவுக்கரசி என்னும் சஞ்சிகையும்மாணவர்களால்உருவாக்கப்பட்டசிந்தனைத்துளிகள், முதுமொழிகள், கட்டுரை மலர் ஆகிய சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டன. (ம-9,159)

*கச்சாய் அ.த.க. பாடசாலையில் கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலம்பெயர் உறவுகளால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் தாய்மண் நல்வாழ்வு சார் தொண்டு நிறுவனத்தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று அதிபர் கா.குணசிங்கம் தெரிவித்தார். (ம-9,159)*



## குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 6

வலி.கிழக்குப்பிரதேசசபை புத்தூர் கிழக்கு ஊறணி பிரதேசமக்களுக்கானகுடிதண்ணீர் விநியோக சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

நிலாவரையில் உள்ள குடிதண்ணீர் கிணற்றின் ஊடாகவே இந்தக் குடிதண்ணீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது என்றுதெரிவிக்கப்பட்டது. (ம-17)

## யாழ். குடாவுக்குப் படையெடுக்கும் வெளிநாட்டுப் பறவைகள்

யாழ்ப்பாணம், நவ. 6

தற்போதையகாலநிலைமாற்றத்தினாலும்பருவப்பெயர்ச்சிமழை பெய்ய ஆரம்பித்ததை அடுத்தும் வெளிநாட்டுப்பறவைகள்பலவும் வரிசையாகயாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வருகின்றன.

இந்தப் பறவைகள் கூடுதலாக யாழ். குடாக் கடற்பரப்பு மற்றும் தீவுப்பகுதிகளில்உலவிவருகின்றன. வித்தியாசமான தோற்றமுடைய இந்தப் பறவைகளை மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.


கடந்த வருடம் இவ்வாறு யாழ்ப்பாணத்துக்குவந்தவெளிநாட்டுப் பறவைகள் சில விசமிகளால் சட்டவிரோதமானமுறையில்வேட்டையாடப்பட்டன. அத்தகைய நபர்கள் இனங்காணப்பட்டு நீதிமற்றத்தில்முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்த வருடம் அது போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடாது என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

## குகதாசால் உதவிகள்

யாழ்ப்பாணம், நவ. 6

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தனது நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிலருக்கு அண்மையில் சில உதவிகளைச் செய்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் வைத்து இந்த உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. முப்பது வரையிலானமாணவர்களுக்குத்துவிச்சக்கரவண்டிகளும் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பேருக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மின்சார வசதி அற்ற குடும்பங்களுக்கு மின்சார பொருள்கள்மற்றும்நீர்இறைக்கும் இயந்திரங்கள், தொழில் உபகரணங்கள் என்பனவும்வழங்கப்பட்டன. இந்த உதவிப்பொருள்கள்வழங்கும் நிகழ்வில் யாழ். மாநகரபிரதிமுதல்வர்து.ஈசன், மானிப்பாய்பிரதேசசபை தவிசாளர்,வலிகாமம்மேற்குப் பிரதேச சபையைச் சேர்ந்தோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-17)



இந்த வருடம்க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வரலாற்றுப் பாட பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் உபஅதிபர் ஜெயலட்சுமி சந்திரசேகரன் தலைமையில் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ம-9)

## வாய்க்கால்களை தூய்மையாக்க தற்காலிகமாகத் தொழிலாளர்கள்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வடிகால்கள் மற்றும் வெள்ளம் தள்ளி வாய்க்கால்களைச் சீர்செய்து துப்புர வாக்கவென தற்காலிகமாகத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சபையின் அனுமதியுடன் யாழ். மாநகர முதல்வரின் உத்தரவின் பேரில் இந்தத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள அனேகமான வடிகால்கள்மற்றும்வெள்ள வாய்க்கால்கள் கடந்த பலவருடங்களாகத்துப்புரவு செய்யப்படாமல் உள்ளன. தற்போது மழை காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்த வாய்க்கால்கள்யாவும்விரைவாகதுப்புரவுசெய்யப்படவுள்ளன என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். (ம-17)


இத்தீபாவளித் திருநாளில் அனைவருக்கும்
எல்லையில்லா ஆனந்தமும்
நல் அதிர்ஷ்டமும் கிடைக்கட்டும்.
தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்
25 வருடங்கள் தேசத்தை ஒன்றிணைப்பதில்
Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே. என்றும்.

# காணியை எழுதித்தருமாறு கோரிய பொலிஸாரைத் திருப்பியனுப்பிய நகரசபைத் தலைவர்




வவுனியா,நவ .6
வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்தமான காணியில் நீண்ட காலமாகப் பொலிஸார் குடியமர்ந்துள்ள நிலையில், குறித்த காணியைப் பொலிஸ் திணைக்களத்துக்கு எழுத்தித் தருமாறு கோரி நகரசபைக்கு வந்த பொலிஸாரை வவுனியா நகரசபைத் தலைவர் இ. கௌதமன் திருப்பியனுப்பி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் :

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான காணியில் நீண்ட காலமாக, வவுனியா பொலிஸ் நிலையம் இயங்கி வருகிறது. இதனை விடுவிக்குமாறு பல தடவை நகரசபையினால் கோரிக்கை விடப்பட்ட போதிலும், இதுவரை பொலிஸார் குறித்த காணியை விடுவிக்காது காணிக்குள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் இன்றைய தினம் நகரசபைக்கு வருகை தந்த இரு பொலிஸார் குறித்த காணியைப்பொலிஸ்திணைக்களத்துக்கு எழுதி தருமாறும், பெரிய பொலிஸ் நிலையம் அமைப்பதற்குத் தமக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையினால், அதற்காகவே காணியைக் கோருவதாகவும் தெரிவித்தனர்.

எனினும் குறித்த காணியை எக்காரணம் கொண்டும் பொலிஸாருக்கு தரமுடியாது எனத் தான்தெரிவித்துடன், வவுனியா மக்கள் இந்தக் காணியை நகரசபை பெற்று அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள வேண்டும் என கோரிநிற்கும் போது, இவ்வாறான செயலை செய்து மக்களுக்குத் துரோகம் செய்ய முடியாது எனத் தெரிவித்து திருப்பியனுப்பி விட்டேன் எனத் தெரிவித்தார்.(110)




அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

COMMERCIAL BANK

www.combank.lk



## ஈருருளி வழங்கல்

கிளிநொச்சி ,நவ .6
வாய்பேச முடியாத கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலய மாணவன் s.தருனுக்கு கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தினர் ஈருருளி ஒன்றைக் கையளித்துள்ளனர் . இந்த மாணவன் கடந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தவராவார். (222)




## கோவிலுக்கும் வசந்த மண்டபத்துக்குமான அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா,நவ .6
நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் சிபாரிசில் ஒதுக்கபட்ட நிதியில் வவுனியா மாவட்டத்தின் சமணங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சித்திவிநாயகர் கோவிலுக்கும் மற்றும் மதுராநகர் ,ஆசிகுளம் பகுதியில் அமைந்திருக்கும் சிறி கண்ணகி அம்மன் கோவிலுக்கும் வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஆலய பரிபாலன சபையினரின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் நேற்று முன்தினம் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது. (222)

## வவுனியாவில் களைகட்டிய தீபாவளி வியாபாரம்

வவுனியா,நவ .6
இந்துக்களின் முக்கிய பண்டிகைகளின் ஒன்றான இன்றைய தீபாவளியை வரவேற்கும் முகமாக நேற்று வவுனியாவில் தீபாவளி வியாபாரம் களைகட்டிஇருந்தது.
பெரியோர் முதல் சிறியோர் வரை புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக சிறுவர்கள் வெடி கொழுத்தி மகிழ்வதையும் காணக்கூடியதாக இருந்தது.
அதிகளவான மக்கள் வவுனியா நகரில் தமக்கான ஆடைகளையும், பொருள்களையும் கொள்வனவு செய்வதன் காரணமாக சிலவீதிகளில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (110)



### மன்னார் புதைகுழி விவகாரம்

# 100 நாள்களைக் கடந்தும் தொடர்கின்றன அகழ்வுகள்

**மன்னார்,நவ.6**
**மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணி நேற்று 100 ஆவது நாளை கடந்து தொடர்சியாக இடம் பெற்று வருகின்றது. தெடர்ச்சியாக மழை பெய்து கொண்டு இருக்கின்ற போது, மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டும் ,அப்புறப்படுத்தப்பட்டும் வருகின்றன.**

மன்னார் நீதிவான் ரி.சரவணராஜாவின் மேற்பார்வையில், சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தலைமையில் அகழ்வுப் பணி இடம் பெற்று வருகின்றது.
இது வரையான அகழ்வுப் பணிகளின் முடிவின் படி 216 க்கும் அதிகமான மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதில் 209க்கும் அதிகமான மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு, பொதி செய்யப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. மேலும் அடையாளப்படுத்தப்பட்டு இன்னமும் அப்புறப்படுத்தப்படாத மேலதிக மனித எச்சங்களை அப்புறப்படும்தும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன.
குறித்த மனிதப் புதை குழி அகழ்வுப் பணி தொடர்பான விபரங்களை அறியும் பொருட்டு, வலிந்து காணமல் ஆக்கப்பட்டோருக்காக வாதிடும் சட்டத்தரணிகள் அடங்கிய குழு நேற்றுக் காலை 10.30 மணியளவில் மனித புதைகுழிக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (56)



## மனித எச்சங்களை அனுப்பும் நாட்டுக்கான தீர்ப்பு தொடர்ந்தும் ஒத்திவைப்பு

மன்னார்,நவ .6
மன்னார் மாந்தை திருக்கேதீஸ்வர பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட மனித எச்சங்களை, பகுப்பாய்வு செய்வதற்காக எந்த நாட்டுக்கு அனுப்புவது என்பது தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், தொடர்ந்தும் தவணையிடப்பட்டுள்ளது.
கடந்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி,மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து மாந்தைப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு அமைவாக குழாய்களை நிலத்தடியில் பதித்துச் சென்றவேளையில், மனித எச்சங்கள் கொண்ட புதைகுழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இந்தப் புதைகுழி அன்று தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை 33 தடவைகள் அன்றைய மன்னார் நீதிபதி செல்வி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் சட்ட மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி டீ.எல். வைத்தியரத்ன தலைமையில் அகழ்வு செய்தபோது 84 மனித மண்டையோடுகளும் எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.
இந்த மனித எச்சங்கள் வெளி நாட்டு நிறுவனத்தின் மூலமாக பகுப்பாய்வு செய்வது தொடர்பான வழக்கு, மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னாள் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ் ராஜா முன்னிலையில் இடம்பெற்று வந்தது.
இந்த மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு குற்ற விசாரணைப் பிரிவு பொருத்தமான நிறுவனமாக புளோரிடாவில் பீட்டா அனாலிடிக் (அமெரிக்கா) பிஜிங் சீனா, மற்றும் ஆஜென்டினா நாட்டுக்குரிய நிறுவனம் ஆகியவற்றை தெரிவு செய்து மன்றில் தெரிவித்தனர்.
இந்த வழக்கில் மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட மூன்று நிறுவனங்கள் தொடர்பாக குற்ற விசாரணைப் பிரிவினருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகி வாதிடும் சட்டத்தரணிகள் ஆகிய இரு பகுதியினருக்குமிடையே நிலவிய விருப்பு வெறுப்பு கருத்துக்கள் மன்றில் வெளிப்பட்ட நிலையிலேயே இதற்கான கட்டளை நேற்று பிறப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், இதற்கான தீர்ப்புக்காக பிறிதொரு திகதியை மன்று அறிவித்துள்ளது. (60)

## வறட்சி உதவியைப் பெறுவதற்கு துப்புரவுப்பணி

வவுனியாவில் நகர கிராம அலுவலரினால் வரட்சி உதவி வழங்குவதாகத் தெரிவித்து கற்குழிப்பகுதியிலுள்ள பெண்களை அழைத்துக்கொண்டு நகர சபை சிறுவர் பூங்காவை அண்டியபகுதியிலுள்ள அரச விடுதிகள், திணைக்களங்களில் துப்பரவு மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டது.
சுமார் இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள நகர சபை சிறுவர் பூங்காவை அண்டிய பகுதிகளில் சிரமதானம் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் கிராம அலுவலர். இதையடுத்து குறித்த குடும்பப் பெண்கள் இவ்விடயத்தினை பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது அவர்,
நீங்கள் விரும்பினால் துப்பரவு செய்யுங்கள் இல்லாவிட்டால் கிராம அலுவலகரிடம் எழுதிக்கொடுத்துவிட்டு சென்றுவிடுங்கள் என்று தெரிவித்துள்ளார்.
எனவே அரசவிடுதிகளிலும், அரச திணைக்களங்களிலும் தம்மை துப்புரவு மேற்கொள்வதற்கு கிராம அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தாங்கள் வீட்டிலிருந்த உடுப்புகளுடன் இப்பகுதிக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பாகப் பிரதேச செயலர் தெரிவிக்கும்போது வறட்சி உதவி வழங்குவதற்கு குறிப்பிடப்படும் இடங்களில் துப்பரவுப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என சுற்றறிக்கை உள்ளது எனத்தெரிவித்தார்.



கொடிகாமச் சந்தையில்

## வெள்ளம் தேங்கும் பகுதியை பிரதேச சபையினர் நிரவினர்

கொடிகாமம், நவ. 6
கொடிகாமச் சந்தைக்குள் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிகளுக்குச் சாவகச்சேரிப் பிரதேச சபையினர் கற்கள், மண் போட்டு நிரவினர்.
அண்மையில் பெய்த மழையால் சில இடங்களில் வெள்ளம் தேங்கி நின்றதால் அந்த இடங்களுக்கு நேற்றுமுன்தினம் கற்கள் போட்டு நிரவப்பட்டன.
சந்தை வளாகப் பகுதிகளில் மீன் விற்பனைப் பிரிவு, தேங்காய் விற்பனைப் பிரிவு, உடைகள் விற்பனைப் பிரிவு ஆகிய இடங்களில் வெள்ளம் காணப்பட்டதையடுத்து பொதுமக்கள், சந்தை நுகர்வோர் முறைப்பாடு செய்ததையடுத்து பிரதேச சபையினர் இந்தப் பணியில் ஈடுபட்டனர். (4,159,9)


## கொள்ளையுடன் தொடர்பென நேற்றும் ஒருவர் கைதானார்

### அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

சாவகச்சேரி, நவ. 6
நாவற்குளி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளில் சங்கிலித் திருட்டுகளுடன் தொடர்புடைய மேலும் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சாவகச்சேரி நீதிமன்றில் அவர் நேற்று முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை விளக்கமறியலில் வைத்து நாளைமறுதினமும் எதிர்வரும் 15 ஆம் திகதியும் நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிட்டார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதியில் செல்வோர் அணிந்து செல்லும் தங்க நகைகளை அறுத்துக் கொண்டு தப்பிச் செல்லும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. அண்மையில் நாவற்குழிப் பகுதியில் உந்துருளியில் சென்ற வங்கி அலுவலர் அணிந்திருந்த மூன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது.
அந்தக் கொள்ளையர் பயணித்த உந்துருளியின் இலக்கத்தை பாதிக்கப்பட்டவர் அவதானித்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூரைச் சேர்ந்த ஒருவரையும் யாழ்ப்பாணத்தில் உள்ள நகைத் தொழிலகத்தில் பணியாற்றுபவரையும் கைது செய்திருந்தனர்.
அவர்களிடமிருந்து நகைகளை உருக்கிய ஏழரைப் பவுண் தங்கக் கட்டியையும் கைப்பற்றியிருந்தனர்.
தொடர் விசாரணைகளை மேற்கொண்டதில் சங்கானை, மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் உட்பட ஆறு பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.
அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளையிடம் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்த பதில் நீதிவான், ஏனைய நால்வரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கல்வியங்காட்டைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்த பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். இவருக்கு எதிராக நாவற்குழி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சங்கிலி அறுப்புகளுக்கும் தொடர்பு உள்ளன என்று நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இந்த நபரை நாளைமறுதினமும் எதிர்வரும் 15 ஆம் திகதியும் நீதிமன்றில் முற்படுத்துமாறுகூறி விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (4,9,159)

# முல்லையில் நந்திக்கடல் நீர் ஏரியை எல்லைப்படுத்தினர் வனவளத்தினர்

யாழ்ப்பாணம், நவ. 6
முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் நீர் ஏரியை இயற்கை ஒதுக்கிடமாக அரசிதழில் அறிவித்து அதனை அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் வன ஜீவராசிகள் திணைக்களம் நேற்று ஈடுபட்டது.





அங்கு என்னென்ன செய்யக்கூடாது என்றும் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.
2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அரசிதழில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் பகுதி மற்றும் நாயாற்றுக் கடல் நீர் ஏரி ஆகியன இயற்கை ஒதுக்கிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் குறித்த பகுதியை அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.
நந்திக்கடல் பகுதியில் வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் முதற்கட்டமாக அறிவித்தல் பலகையை நடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். நந்திக்கடல் பகுதியைச் சுற்றி ஐந்து இடத்தில் அறிவித்தல் பலகைகள் நடப்பட்டுள்ளன.
4 ஆயிரத்து 141 ஹெக்ரேயர் கொண்ட நடந்திக்கடல் இயற்கை ஒதுக்கிடமாகவும் 4 ஆயிரத்து 464 ஹெக்ரேயர் பரப்புக் கொண்ட நாயாற்றுஏரிப்பகுதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிவிப்பு பதாகையில் நந்திக்கடல் இயற்கை ஒதுக்கிடம். காட்டு மிருகங்களை வேட்டையாடுதல், வெடிவைத்துக் கொல்லுதல், பிடித்தல் அல்லது காட்டுமிருகங்களைப் பிடித்து வளர்ப்பதற்கு அல்லது கொல்வதற்குப் பொறிவைத்தல், ஏதேனும் பறவைகள் அல்லது ஊர்வனவற்றின் முட்டைகளை சேகரித்தல் கூடுகளைச் சேதப்படுத்தல், விலங்குகள் பெருகுகின்ற இடங்களுக்குச் சேதம் விளைவித்தல், ஏதேனும் தாவரங்களை வெட்டுதல், சேகரித்தல், அழித்தல், பிடுங்குதல் கட்டங்களை அமைத்தல் காணிகளை துப்புரவாக்கால், பயிர்செய்தல், சுரங்கம் தோண்டுதல், கழிவுகளைக் கொட்டுதல் சதுப்பு நிலங்களை நிரப்புதல் போன்றன முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதி உட்பட அனைத்து இடங்களிலும் வனவளத்துறையினர் தன்னிச்சையாகப் பிரதேசங்களைக் கையகப்படுத்தி வருகின்றனர் என்று பொதுமக்கள் பலரும் கவலை தெரிவித்து வருகின்றனர். தமது வாழ்வாதாரங்களைப் பறிப்பதாகவே அவற்றைக் கையகப்படுத்துவது அமைந்துள்ளது என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (4,ரி3)

## கத்தி காட்டி அச்சுறுத்தி சங்கிலி பறித்தவர் கைது

சாவகச்சேரி, நவ. 6
கொடிகாமத்திலிருந்து சென்ற மகிழுந்தைப் பின் தொடர்ந்து உந்துருளியில் சென்ற இருவர் கெற்பேலியில் வழிமறித்து வாகன சாரதியின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி அவர் அணிந்திருந்த 5 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
இது தொடர்பாகச் சங்கிலியைப் பறிகொடுத்தவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் கெற்பேலியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்தனர்.
வழக்கை விசாரித்த நீதிவான் அவரை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4,9,159)

## கஞ்சா வைத்திருந்தனரென இருவர் கைதாகிப் பிணை


சாவகச்சேரி, நவ. 6
வீதியோரத்தில் அமர்ந்திருந்த இருவரைச் சந்தேகத்தின் பேரில் சோதனை நடத்திய பொலிஸார், அவர்களிடமிருந்து கஞ்சாவைக் கைப்பற்றியதாகவும்



அவர்களைக் கைது செய்ததாகவும், தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.
ஒருவரிடம் ஒருகிராம் 700 மில்லி கிராம் கஞ்சாவும் மற்றவரிடம் ஒரு கிராம் 550 மில்லிகிராம் கஞ்சாவும் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். விசாரணையின் பின்னர் இருவரும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4,9)

## உசன் இராமநாதன் வித்திக்கு அதிபரை நியமிக்கக் கோரிக்கை

கொடிகாமம், நவ. 6
ஆறு மாதங்களுக்கு மேலாக அதிபரின்றி இயங்கும் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்துக்கு அதிபரை நியமிக்குமாறு பாடசாலைச் சமூகத்தினர் கோரியுள்ளனர்.
வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய த.சோதிலிங்கம் கடந்த பெப்ரவரி மாதம் எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேசா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அதனால் அந்தப் பாடசாலை உப அதிபரின் தலைமையில் இயங்கி வருகிறது.
வித்தியாலயத்தில் அதிபரின்றிச் செயற்படுவதால் உடனடியாக அதிபரை நியமிக்குமாறு அந்தச் சமூகம் கேட்டுள்ளது.
"வித்தியாலயத்துக்கு அதிபரை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. வகை 2 ஐச் சேர்ந்த பாடசாலை என்பதால் மாகாணக் கல்வித் திணைக்களமே அதிபரை நியமிக்க வேண்டும்" என்று தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (4,159,9)



## கூட்டுறவுச் சபைக் கட்டடத்திலிருந்து முழுமையாக வெளியேறிய ராணுவம்

மன்னார், நவ. 6
மன்னார் நகர நுழைவாயிலில் சுமார் 28 வருடங்களுக்கு மேலாக ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமான கட்டடத்திலிருந்து ராணுவத்தினர் நேற்று முழுமையாக விலகினர்.
குறித்த கட்டடம் ராணுவத்தினரால் மன்னார் பிரதேசச் செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. கடந்த மாதம் 29 ஆம் திகதி மன்னார் நகர உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகாம்பிகை கூட்டுறவுத் திணைக்கள அதிகாரியிடம் கட்டடத்தை உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.
குறித்த கட்டடத்தில் இருந்த இராணுவம் முழுமையாக வெளியேறவில்லை. அவர்கள் வெளியேற கால அவகாசம் கோரி இருந்தனர்.
இந்த நிலையில் குறித்த கட்டடத்தில் இருந்த ராணுவத்தினர் அனைவரும் நேற்று முற்பகல் 10 மணியளவில் அங்கிருந்து வெளியேறினர். (4,56)

# தீய சக்திகளை முறியடித்து உண்மை, நீதி உருவாகட்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 6.

தீய சக்திகளை முறியடித்து உண்மையும் நீதியும் நிலைநாட்டப்படுகின்ற ஒருநாளாக தீபாவளி அமைவதோடு, எமது மக்கள் நிரந்தரமான சமாதானத்தையும் உண்மையான சுதந்திரத்தையும் அடைய இந்த நன்னாளில் பிரார்த்தனை செய்கிறேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்,

எமது மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாசைகள் என்பன பெருஞ்சவால்களை எதிர்நோக்கியுள்ள இந்தச் சூழ்நிலையில், இந்தத் தீபத்திருநாளானது தீய சக்திகளை முறியடிக்க வேண்டும்.

எமது மக்களின் அன்றாட வாழ்க்கையில் காணப்படும் இடர்கள் நீங்கி வளம்பெற எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

எமது மக்களும் இந்தநாடும் ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற இந்த நன்னாளில் இறைஞ்சுவோமாக - என்றுள்ளது. (4)

# பகைமையை நீக்கி சக வாழ்வு வேண்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் இப்படிக் கூறுகிறார் அரச தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 6

பல தசாப்தங்களாக பகைமையால் ஏற்பட்ட வேதனைகளைச் சுமக்கும் சமூகம் என்ற வகையில், இனங்களுக்கு இடையே பகைமையை நீக்கி புரிந்துணர்வையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதன் மூலமே நாடும் மக்களும் நலம் பெறுவர்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில்,பொறுமை, அடக்கம், அறிவு, ஆன்மீகம் போன்ற நற்பண்புகள் மனித மனங்களில் குடிகொள்ள வேண்டுமாயின், அஞ்ஞானம் எனும் இருள் அகல வேண்டும். அந்த இலக்கை அடைய தீபங்களை ஏற்றிக் கொண்டாடுவதற்கு வாழ்த்துகிறேன் - என்றுள்ளது. (4)

# தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக பரம்பொருளைப் பிரார்த்திப்போம்

## இலங்கை இந்துமாமன்றம் தீபாவளி வாழ்த்து

யாழ்ப்பாணம், நவ. 6

கொடுமைகள் புரிந்த நரகாசுரனை, அவனது அதிகாரத்தை கடவுள் அழித்தார். உலகில் தர்மத்தை நிலைநாட்டினார். இது தீபாவளி. அதுபோன்று, நாட்டில் உள்ள தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றம் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

சமயங்கள் மனிதன் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டுபவை.

நரகாசுரன் ஒரு அரசன். அசுர குணம் கொண்டு நாட்டு மக்களுக்கு துன்பம் தரும் செயல்களில் ஈடுபட்டான். மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு உலைவைத்தான். தம்மைப் பாதுகாத்து அச்சமில்லா நிம்மதியான வாழ்வை வழங்க வேண்டிய அரசனே தமக்கு எதிரியானால் நாட்டு மக்கள் யாரிடம் முறையிடுவது?

குடிமக்கள் நாடாளும் அரசனிடமிருந்து அவனது கொடுங்கோன்மை ஆட்சியிலிருந்து தம்மை மீட்டெடுத்துப் பாதுகாக்குமாறு இறைவனிடம் மன்றாடினர்.

இந்த நாட்டில் எவ்வித நடவடிக்கைகளும் இன்றி சிறைகளில் அரசியல் கைதிகளாக வாடுவோர் கூடிய விரைவில் விடுதலைபெறவும், அரசியற் பிரச்சினைக்குத் தீர்வாகவும் பரம்பொருளைப் பிரார்த்திப்போம் - என்றுள்ளது. (4)

# எதிர்பார்ப்புகள் நிறைவேறட்டும்

## வவுனியா அந்தணர் ஒன்றியம் அறிவிப்பு

அனைவரும் சிறப்பான எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற அனைவரினதும் எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டும் என்று வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

ஒன்றியம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்,

உலகில் வாழும் அனைத்து மக்களும் தம் வாழ்வில் இருள் நீங்கி ஒளிமயமான வாழ்வினைப் பெற அனைவருக்கும் இனிய தீபாவளித்திருநாள் வாழ்த்துகள். தீபாவளியைத் தமிழ் மக்களாகிய நாம் வருடாந்தம் எதிர்பார்ப்போடு கொண்டாடுகிறோம். ஆனாலும் அது என்னவோ தீபாவளி புஸ்பவானம் மாதிரி எமது மக்களுக்கு ஆகிவிடுவது துரதிஷ்டமே.

ஆனாலும் இந்த வருடத் தீபாவளியாவது அனைத்து மக்களுக்கும் நல்லதொரு ஆரம்பத்தை வழங்குவதாக அமையவேண்டும் - என்றுள்ளது. (4,110)

# சிறப்பான நல்வாழ்வுக்காக கடவுளைப் பிரார்த்திப்போம்

## *வண்ணை வைத்தீஸ்வரன் குரு வாழ்த்து*

யாழ்ப்பாண மக்கள் எல்லோரும் இன்றுமுதல் ஒற்றுமையாக ஒருமனதாக நாங்கள் அனைவருமே சிறப்பான நல்வாழ்விற் திளைத்திருக்க அருள்புரிய வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் முதன்மைக் குரு சிவப்பிரம்மசிறி சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"ஆண்டிலோர் தீபாவளியாம் அதை ஆண்டியும் கொண்டாடி மகிழ்ந்திருக்க வேண்டுமாம்" என்னும் முதுமொழிக்கிணங்க ஈழம்வாழ் மக்கள் இன்பமாய் வாழ எல்லாம் வல்ல வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை அருள்செய்ய வேண்டுமென்று நாம் உளமாரப் பிரார்த்தித்து வணங்கி வாழ்த்தி ஆசிகள் வழங்கி மகிழ்கின்றோம் - என்றுள்ளது. (4)

# மகிழ்ச்சிக்காக உழைப்போம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 6

எமது மக்களின் வாழ்வில் நிரந்தரமாக ஒளிவீசும் நீடித்த மகிழ்ச்சியின் வருகைக்காக உழைப்போம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்... தர்மம் மறுபடி வெல்லும். என்று எமது மக்களின் மனங்களில் விதைக்கப்பட்ட நம்பிக்கை முழுமையாக வெல்லும் காலத்தை நோக்கி நகர்ந்து செல்கிறது.

எமது வரலாற்று வாழ்விடங்களில் மாற்றங்கள் நிகழ வேண்டும். வாழ்வெங்கும் துயர்களும் வலிகளும் வதைகளும் சுமந்த எமது மக்களின் இல்லங்கள் தோறும் நிரந்தர தீப ஒளிகள் ஏற்றப்பட வேண்டும் என்று அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# தற்போதைய களநிலமையை புத்திஜீவிகள் தடுக்கவேண்டும்

## இந்து சமயப் பேரவை தெரிவிப்பு

அந்நிய காலனித்துவ ஆட்சி முடிந்த பின்பும் நாட்டில் தற்போதைய அரசியல்நிலை தொடர்வதை எமது பிரதேசத்தில் வாழும் புத்திஜீவிகள் தடுத்து நிறுத்த முன்வராதிருப்பது கவலைக்குரியது. பல துன்பங்களுக்குள் சிக்குண்டு தவிக்கும் எமது மக்களுக்கு நல்லாட்சியில் வாழ்வதற்கான புதிய சகாப்தம் உருவாகவேண்டும் என்று அனைவரும் பிரார்த்திக்க வேண்டும்.

இவ்வாறு, இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி: சக்திகிரீவன் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

நரகாசுரனின் கொடுங்கோல் ஆட்சி முடிவுக்கு வந்த புனிதநாளே தீபாவளித் திருநாள்.

எமது மக்கள் தமது சுயத்தை இழந்து யாரோ ஒருவரின் தயவில் வாழ்வது போன்ற மாயையில் சிக்கித் தவிப்பது வேதனைக்குரியது.

அனைவரும் கடந்த காலத்தில் நடந்த கசப்பான சம்பவங்களை மறந்த புதிய உத்வேகத்துடன் வாழ திடசங்கற்பம் பூணுவோமாக.எமது மக்கள் உயரிய ஆத்மீக சிந்தை படைத்தவர்களாகத் திகழ எல்லாம் வல்ல ஆடல்வல்லான் திருவருளை இந்தநாளில் இறைஞ்சி நிற்கின்றேன் - என்றுள்ளது. (4)

# வக்கிரபுத்தி அழியட்டும்

## வாசுதேவக்குருக்கள் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், நவ. 6

தீபாவளித் திருநாளில் பழிவாங்கல், விட்டுக்கொடுப்பின்மை, ஏமாற்றுதல், கருணையின்மை வக்கிரபுத்தி முதலான மனதில் இருக்கக்கூடிய அதர்மம் சார்ந்த குண இயல்புகளை இறைவன் அழித்து நல்லகுணஇயல்புகளைப் பிரகாசிக்கச் செய்தல் வேண்டும்.

இவ்வாறு வீணாகான குருபீட சிறி சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலின் சிவசிறி சபா.வாசுதேவக்குருக்கள் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

**வழிபடும் வலுவை அதிகரியுங்கள்!**

போர் நிறைவடைந்த பிற்பாடும் நாம் எமது பண்டிகைக் காலங்களில் எப்பொழுதும் போரால் பாதிப்படைந்த மக்கள் நலம்வேண்டிப் பிரார்த்திப்பது வழமையாகும். இருந்தபோதும் பிரார்த்தனையின் வலு குறைந்தே உள்ளது. அதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றத்தைச் சந்தித்து வருகின்றார்கள். அந்த வலுவை அதிகரிக்க வேண்டும். எனவே இன்றைய நாளில் ஆலயங்களில் இறைவனைப் பிரார்த்தனை செய்யுங்கள். முழு நம்பிக்கையுடன் ஒன்றுபட்டு ஈடுபடுங்கள். இறையருளால் எம்மைச் சூழ்ந்திருக்கும் துன்பங்கள் நிச்சயமாக தீபாவளி திருவொளியால் விலகிவிடும். அனைவரும் இன்புற்றிருக்க வாழ்த்துக்களும் நல்லாசிகளும் - என்றுள்ளது. (4)

# நல்வாழ்வில்த் திளைத்திருக்க இந்நாளில் வாழ்த்துகின்றோம்

## இராசையா ஸ்ரீதரன் தீபாவளி வாழ்த்தில் தெரிவிப்பு

ஈழம்வாழ் மக்கள் அனைவரும் ஆனந்தமும் மங்களமும் நிறைந்த நல்வாழ்வில் திளைத்திருக்க தீபாவளி நன்நாளில் வாழ்த்துகின்றோம்.

இவ்வாறு, ஆன்மீக எழுத்தாளரும் வில்லிசைக் கலைஞருமான கலாபூசணம் இராசையா ஸ்ரீதரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நல்ல புனித புண்ணிய நாளைத் தித்திக்கும் தீபாவளியே இனிய நல்வாழ்வு தர வருக.

இன்றைய பெருநாளில் புத்தாடை அணிந்து பெற்றோரை வணங்கி நல்லாசி பெற்று மகிழ்ந்திருக்கவும் உற்றார் உறவினர்களுடன் கூடியிருந்து நல்ல வண்ணம் இனிய வார்த்தை பேசி உரையாடி நல்வாழ்வு வாழவும் வழி பிறக்க வேண்டுமென்று வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானை வழிபாடியற்றி உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம் - என்றுள்ளது. (4)

### அறிவொழியை மறைக்கும் திரைகளை விலக்குங்கள்!

## வல்வை முத்துமாரி அம்மன்கோவில் குரு வாழ்த்து

யாழ்ப்பாணம், நவ. 6

உங்கள் அறிவொளியை மறைத்துக்கொண்டிருக்கும் அற்ப விஷயங்கள் என்னும் திரைகளை விலக்குங்கள். அக்கணமே ஆனந்தம் நிறையும்.

இவ்வாறு,வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் முதன்மைக்குருவும் இந்துமதகுரு பீடாதிபதியும் சமாதான நீதிவானுமாகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர், தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

எல்லா ஆனந்தங்களையும்விட மேலான ஆனந்தத்தைத் தருவது தான் அறிவொளியால் விளையும் தீபாவளி. இது இறைவனால் படைக்கப்பட்டது. அற்ப விஷயங்களில் மனதைக் கலக்க விடும்போது அறிவொளி மங்குகின்றது. நல்ல விஷயங்களில் மனதைக் கலக்க விடும்போது அறிவொளி முழுமையாகப் பிரகாசிக்கின்றது - என்று அந்தச் செய்தியில் உள்ளது. (4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசியலிலும் தித்திக்கட்டும் இந்தத் தீபாவளித் திருநாள்

இன்று தீபாவளி. துன்பங்கள் எல்லாம் அகன்று நன்மைகள் எம்மை வந்தடைவதற்கான நாள். ஆண்டு தோறும் தீபாவளியைக் கொண்டாடும்போது தமிழ் மக்களுக்கு இந்த ஆண்டாவது அரசியல் விடிவு கிட்டிவிடாதா என்கிற எதிர்பார்ப்பும் கூடவே வருகின்றது.

நம்மில் பெரும்பாலோனோருக்குத் தெரியும் நரகாசுரன் கதை. நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வாரக அவதாரம் எடுத்து பூமியைத் துழைத்து. அசுரர்களை அழிக்கச் சென்றபோது அவரது தொடுகையால் பூமாதேவிக்குப் பிறந்தவன் நரகாசுரன். கடவுள் அசுர வதத்தில் இருந்தபோது கருவானவன் என்பதால் அசுர குணம் அவனிடத்தில் இயல்பாகவே இருந்தது. நரன் என்றால் மனிதன் என்று பொருள். மனிதனாக இருந்தாலும் அரசுரனாக இருந்தான் என்பதால் அவனை நரக அசுரன் என்று அழைத்தார்கள். அதுவே நரகாசுரன் ஆகிப்போனது.

கடவுளின் பாதி அவதாரமான நரகாசுரன் தன் பலம் என்ன என்பதை உணர்ந்தபோது அசுரர்களுக்கு மட்டுமல்ல தேவர்களுக்கும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தான். வழக்கம் போலவே தேவர்கள் திருமாலிடம் சென்று அழ ஆரம்பித்ததால் நரகாசுரனைக் கொல்வது என்று திருமால் முடிவெடுத்தார். ஆனால் நரகாசுரனோ பூமித் தாய்க்குப் பிறந்தவன். அவனை பூமித் தாயைத் தவிர வேறு எவராலும் கொல்ல முடியாது என்கிற வரம் பெற்றவன்.

நரகாசுரனை நேரில் வெல்ல முடியாது என்று கண்ட திருமால் ஒரு உத்தியைக் கடைப்பிடித்தார். சண்டைக்குத் தன் சகி சத்தியபாமாவுடன் சென்றார். நரகாசுரனுடனான தீவிர சண்டைக்கு நடுவே நரகாசுரனின் அம்பு ஒன்று திருமாலை மெல்லத் தாக்கிச் செல்ல, கடுமையாக அடிபட்டதைப் போன்று மயங்கி வீழ்ந்தார் அவர். இதைப் பார்த்துக் கோபமடைந்த சத்தியபாமா நரகாசுரனுடன் தொடர்ந்து போரிட்டு அவனைக் கொன்றாள். சத்தியபாமா பூமா தேவியின் அவதாரம் என்பதால் அவளால் நரகாசுரனைக் கொல்ல முடிந்தது. சாகும் தருவாயில்தான் கொன்றவள் தன் தாய் என்பதைத் தெரிந்துகொண்டான் நரகாசுரன்.

உடனே தான் மறைந்த இந்த நாள் உலக மக்கள் எல்லோர் மனங்களிலும் நிற்க வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் அசுரர்களும் புதிய ஒளி கிடைத்ததாகக் கருதி ஒளிமயமாகக் கொண்டாட வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அதுவே தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது என்கிறது புராணம்.

வனவாசத்தை முடித்துக் கொண்டு இராமன் நாட்டுக்குத் திரும்பிய நாள் இதுவென்றும் அதனையே கொண்டாடுகின்றார்கள் என்றும் சிவன் அர்த்தநாரீசுவரராக, சக்தியைத் தன்னில் பாதியாக ஏற்றுக்கொண்ட நாளே தீபாவளி என்றும் கூடக் கதைகள் உள்ளன.


இலங்கையின் அரசியல் களத்திலும் இப்போது நல்லவர்களாக, பாதிக் கடவுளர்களாகத் தம்மை வெளிக்காட்டி வந்த சிலர் திடீரென அசுரர்களாக முழு அவதாரம் எடுத்து நிற்கிறார்கள். போதாக் குறைக்கு மோசமான அசுரர்களுடன் சேர்ந்தும் இருக்கிறார்கள். இந்த வாரத்திலோ அடுத்த வாரத்திலோ அவர்களுக்கும் மக்களாட்சியைப் பாதுகாக்கப்போகிறோம் என்கிற தேவர்களுக்கும் இடையிலான போராட்டம் ஒன்று இருக்கிறது. தீபாவளியில் கடவுளர்கள் அசுரர்களை அடக்கி வெற்றி பெற்றதைப் போலவே இங்கும் நடக்குமா என்கிற எதிர்பார்ப்போடு இந்தத் தீபாவளியை எதிர்க்கொண்டுள்ளார்கள் தமிழ் மக்கள்.

நல்லதே நடக்கட்டும்! இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



# சம்பந்தனின் முடிவு ஏற்கத்தக்க ஒன்று

இந்துமதி



மகிந்தராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் படவிருக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மகிந்தவுடனான சந்திப்பின்போது கூட்டமைப்பின் தலைவர் விடுத்த கோரிக்கை தொடர்பான எந்தவித தகவல்களும் வெளிவராத நிலையில். மகிந்தவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவிருக்கின்ற தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கான இந்த முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மகிந்தவின் பக்கம் தாவியமை கூட்டமைப்பின் தலைவருக்கு நிச்சயமாக வெறுப்பை ஏற்படுத்தியிருக்கும். அத்துடன் நாட்டின் தற்போதைய குழப்ப நிலைக்கு மகிந்தவும் ஒரு காரணம் என்பதும் அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கும். ஆகவேதான் மகிந்தவுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை அவர் எடுத்துள்ளார் என்று நம்ப முடியும். ஆனால். இதை ரணிலுக்கு ஆதரவானதொரு முடிவாகக் கொள்ள முடியுமா என்பது கேள்விக்குரியது.

### கூட்டமைப்புக்கு எதிரான பரப்புரைகள் ஆரம்பம்

குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் சிலர் வழக்கம்போன்று கூட்ட மைப்புக்கு எதிரான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மகிந்தவுடன் இணையவுள்ளதாக அவர்கள் தொடர் பரைப்புரைகளில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது. குடாநாட்டிலிருந்து வெளியாகும் சில பத்திரிகைகளும் ஊடக தர்மத்தை மறந்து இவர்களுக்கு ஒத்தூதி வருகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது கூட்டமைப்பு விழிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியம் புரிகின்றது. இதேவேளை மகிந்தவுடன் புதிதாக இணையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படுமென்ற அரச தலைவரின் அறிவிப்பு இந்த நாட்டின் அரசியல் எத்தகைய கேவலமான நிலைக்குச் சென்றுவிட்டது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இத்தகையதொரு நிலை தோன்றியிருப்பது நாட்டுக்கு நல்லதாகத் தெரியவில்லை.



### மனோ கணேசன் விட்டிருக்கின்ற புதிய கதை

நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோகணேசன் எவருமே நம்பமுடியாத புதிய கதை ஒன்றை எடுத்து விட்டிருக்கிறார். தம்மை மகிந்தவுடன் இணைந்து கொள்ளுமாறு புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் வற்புறுத்திக் கேட்டதாக அவர் கூறியதை எந்தவகையில் நம்புவது என்று தெரியவில்லை. மகிந்த வெளிநாட்டுக்குச் செல்லும்போதெல்லாம் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிடுவது புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களின் வழமையாகும். அவ்வாறானவர்கள் மனம் மாறி மனோ கணேசனுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு என்ன காரணம் எனவும் தெரியவில்லை. இந்தத் தகவலில் உண்மை இருக்குமானால் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் கண்டறியப்படவேண்டும்.

### பணத்துக்கும் பதவிக்கும் அலைகின்ற உறுப்பினர்கள் தவிர்க்கப்படுவார்கள்

பணத்துக்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு விலை போகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களால் இனி வரும் தேர்தல் காலங்களில் வாக்குக் கேட்டு மக்கள் முன்பாகச் செல்லவே முடியாது. 'பச்சைத் துரோகி' என்று சுட்டிக்காட்டியிருக்கின்ற மக்களின் கொதிநிலை இறுதி வரைக்கும் அடங்காது என்பது நிதர்சனம். குறிப்பாக இத்தகைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழ்மக்கள் இனிவரும் காலங்களில் விரட்டி அடிப்பார்கள் என்பதில் ஐயமே இல்லை.

### கிடைக்கின்ற இடைவெளிக்குள் மூக்கை நுழைக்கும் உத்தி

கொழும்பு அரசில் பிரச்சினைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்ற இந்தச் சமயம்பார்த்து. தள்ளாடுகின்ற ஒருவரைத் தலைவராகக் கொண்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு...! என்பதாகக் கூட்டமைப்பையும் அதன் தலைவரையும் விமர்சித்து எழுகின்ற குரல்களும் அவதானிக்கப்படுகின்றன. சமயம் பார்த்துக் காத்திருப்பதுபோல முன்னாள் முதலமைச்சரையும், அவர் ஆரம்பித்திருக்கின்ற தமிழ்மக்கள் கூட்டணியையும் சிலாகிக்கின்றன அதே குரல்கள். தமிழர்களின் ஒற்றுமையின்மை என்பது இந்தவிடயத்தில் ஒருபக்கம் இருக்க, விக்னேஸ்வ ரனின் முதுமையும், இயலாத தன்மையையும் இந்தத் தரப்பினரின் கண்களுக்குத் தெரியாமல் இருப்பது ஆச்சரியப்படவேண்டியதல்ல. காரணம் அவர்கள் அறிவு புகட்டப்பட வேண்டியவர்கள்.

### மகிந்த தரப்புக்கு அதிர்ச்சி

மகிந்தவை நிராகரிப்பதான கூட்டமைப்பினர் முடிவு மகிந்த அணியினரை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இதனால்தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகப் புதிய தலைமை அமைச்சரான மகிந்தராஜபக்ச கூறியுள்ளார். ஆனால் தமிழ்மக்கள் இதை ஒருபோதுமே நம்பப் போவதில்லை. ஏனென்றால் மகிந்தவின் கடந்த கால நடவடிக்கைகளை அவர்கள் நன்கறிவார்கள். கூட்டமைப்பு எடுத்த முடிவால் தெற்கில் தமிழர்களுக்கு எதிரான குரோதம் பெருகிவிடுமெனக் கூறுவதை ஏற்கமுடியவில்லை. சிலவேளை கூட்டமைப்பு மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்தாலும் இது தான் நடக்குமென்பதை நாம் மறந்துவிட முடியாது. நடுநிலை வகித்தாலும் இரண்டு தரப்பினரின் வெறுப்பையும் கூட்டமைப்புச் சந்திக்க நேரிடும்.

தற்போதுள்ள நாட்டின் அரசியல் குழப்பங்களைப் பார்க்கும்போது சம்பந்தனின் முடிவு ஏற்கத்தக்க ஒன்றாகவே தெரிகிறது.

# மகிந்த - ரணில்-நடுநிலைமை

ஏரம்பு பரஞ்சோதி

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதப் பிற்பகுதியில் இலங்கை அரசியலில் சற்றும் எதிர்பாராத ஒரு மாற்றம் ஏற்பட்டது. அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தனது கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இரண்டறக் கல்ந்ததே அந்த மாற்றம். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச புதிய அரசின் தலைமை அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டதும் ரணிலா, மகிந்தவா அதிகாரத்திலுள்ள தலைமை அமைச்சர் ? என்ற கேள்வியும், சட்டப் பிரச்சினைகளும் எழுந்துள்ளன. இந்த அலைக்குள் சிறுபான்மை இனங்களைப் பிரதிப லிக்கின்ற முஸ்லிம், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணம் கொடுத்து வாங்குவதற்கு முயற்சிக்கிறது மகிந்த தரப்பு என்ற செய்திகளும் அடிபடுகின்றன.



**தமிழர் விடயத்தில் ரணிலின் ஈடுபாடு**

தமிழர் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ரணில் விக்கிரமசிங்க செவிசாய்த்து அதற்கான தயாரிப்புக்களிலும் இறங்கியிருந்தார். இது தொடர்பான வரைவு ஒன்று நவம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகிந்தவிடம் சரணடைந்திருந்தார். இது தனது உயிர்ப் பாதுகாப்புக்காகவே என்று அவர் கூறியபோதிலும் தமிழர் பிரச்சி னைக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தைக் குழப்புவதே இந்த நாடகத்தின் மற்றுமோர் ஏற்பாடு எனத் தமிழர் தரப்பில் குற்றம் சாட்டப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விவகாரம் தொடர்பில் இந்தியா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா என்று பலதரப்புக்களிடமும் தமிழருக்கான ஒரு தீர்வு அவசியம் என அறிவித்திருக்கும் நிலையில் மேற்படி நாடுகளைப் பின்னணியாகக் கொண்டு இயங்கும் ரணில் விக்கிரம சிங்கவின் கரங்களைப் பலப்படுத்தவேண்டிய தேவையும் பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.

**கூட்டமைப்பின் ரணில் மீதான நம்பிக்கை**

தமிழர் விடயத்தில் அரசியல் தீர்வு ஒன்றைப் பெறுவதே தமது முதல் இலக்கு, அதை வைத்தே மக்கள் தமக்கு ஆணை வழங்கினார்கள். இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கியதால் 'துரோகி' எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே அவரை விமர்சித்திருக்கின்றனர். இது கூட்டமைப்பின் ரணில் மீதான நம்பிக்கையையும் தமிழர் தீர்விலுள்ள அக்கறையையுமே காட்டி நிற்கிறது. தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வேறு சில நாடாளுமன்றஉறுப்பினர்களும்மகிந்தஅணிக்கு மாறவிருக்கின்றனர் என ஈ.பி.ஆர்.எல்.எவ்.,இன் நடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்து வெளியிட்டதற்காக 150கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி நடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், சார்ள் நிர்மல நாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகிய மூவரும் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. இந்த நடவடிக்கையும் ரணில் மீதான கூட்டமைப்பினரின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

**"மைத்திரி பிழையாக நடந்திருக்கிறார்"-மாவை**

யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி இந்தியாவுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுப்போம் என்றிருக்கிறார் மாவை சேனாதிராசா. இந்தியாவின் மூத்த ராஜதந்திரிகள் இருவர் எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தனைச் சந்தித்ததன் பின்னர் தாம் ரணில் விக்கிரம சிங்கவையே ஆதரிக்கவிருக்கிறோம் எனவும் வவுனியாவில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் மாவை சேனாதிராஜா உரையாற்றும்போது மைத்திரி பிழையாக நடந்திருக்கிறார் எனவும் குற்றம் சட்டியிருந்தார்.

**கூட்டமைப்பின் ஆதரவு அணியே பலப்படும்**

"பேர் முடிவடைந்த பின் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளராக நிய மிக்கப்பட்ட சரத் பொன்சகவுக்கே தமது வாக்குகளை வழங்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேக, சம்பந்தன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்தி ரன், செல்வம் அடைக்கலநாதன் என அனைத்துத் தமிழ்க் கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் நின்று வலியுறுத்தினார்கள்."

மகிந்த அணி நாளுக்கு நாள் பல நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பக்கம் வளைத்தெடுப்பதற்கு அதிக பிரயத்தனம் எடுத்து வரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எஞ்சியிருக்கும் 15 நாடாளுமன்ற உறுப்பினர் தொகை என்பது ரணில் விக்கிரமசிங்கவை அதிகம் பலமாக வைத்துள்ளது. மகிந்தவுக்கு வாக்களிப்பதால் உடனடியாக அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்று பலரும் கருத்துக் கூறும் நிலையில் அரசியல் தீர்வு கிடைத்துவிட்டால் அரசியல் கைதிகள் விவகாரம் மிக இலகுவாகக் கையாளக்கூடியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பக்கூடும்.

**ஐக்கிய தேசியக் கட்சிக்கே தொடர் ஆதரவு**

போர் முடிவடைந்த பின் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளராக நியமிக்கப்பட்ட சரத் பொன்சகவுக்கே தமது வாக்குகளை வழங்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேக, சம்பந்தன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் என அனைத்துத் தமிழ்க் கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் நின்று வலியுறுத்தினார்கள்.

2015ஆம் ஆண்டில் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவால் முன்னி றுத்தப்பட்ட மைத்திரி பால சிறிசேனா வுக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்தது. எனவே 2010ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ரணில் விக்கிரமசிங்க வுக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்கும் சார்பாகவே கூட்டமைப்பு நிலை யெடுத்திருக்கிறது. இந்தத் தருணத்தில் கூட்டமைப்பு மகிந்தவின் பக்கம் சார்ந்தால், தமிழரை இலகுவாகக் காசு கொடுத்து வாங்க முடியும் என மிகச் சாதாரணமாக எண்ணக்கூடும். தமிழரின் கௌரவத்தைத் கூட்டமைப்புப் பேணி வருவது தமிழருக்குப் பெருமையளிப்பதே.

**மகிந்தவுக்கு வாக்களிக்காது நடுநிலமை வகிப்பதும் மகிந்தவுக்கு ஆதரவளிப்பதாகவே கருதப்படக்கூடியது**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்காளிக்காது நடுநிலமை வகித்தால், அது மகிந்தவுக்குச் சார்பானதாகவே, வாக்களிப்பதாகவே அமையும். மகிந்தவுக்கு நேரடியாக ஆதரவளித்த வியாழேந்திரனுக்குப் பல கோடி ரூபா இலஞ்சமாக வழங்கப்பட்டதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இந்த நிலையில் நடுநிலமை வகிப்பவர்களுக்கும் ஒரு தொகைப் பணத்தை வழங்குவதற்கு மகிந்த அணி தனிப்பட்ட பேச்சுக்களில் ஈடுபடுவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

எனவே சம்பந்தர் அணியிலுள்ள 15நடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலுக்கு ஆதரவாக வெளிப்படையாக வாக்களிப்பதே அவசியமானது. இல்லாவிடில் இங்குள்ள ஒரு வானொலியில் ஒளிபரப்பட்டு வருகின்ற, தகவலாக இருக்கின்ற அந்த வானொலியைக் கேட்டாலும் காசுதான் கேட்காவிட்டாலும் காசுதான் என்ற நிலையே ஏற்படும். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுக்கமாக இருக்க வேண்டும். அதன் மூலமே தமிழரின் ஒற்றுமையையும் பலத்தையும் நிரூபிக்க முடியும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# இடையூறளிக்கின்ற இளைஞர்களுக்குப் பெற்றோர் இல்லையா...?

இரவு நேரங்களில் வீதிகளில் நின்றபடி வம்பளக்கின்ற இளைஞர்கள் பற்றி நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அது எவ்விதத்திலும், ஏதோ ஒரு வகையில் அவர்கள் குடும்பத்துக்கே பாதிப்பைக் கொண்டுசேர்க்கும். ஆனால், அதே இளைஞர்களால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போது அதுபற்றி நாமும் கரிசனை கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இரவு நேரங்களில் வீதிகளில் நின்று வம்பளக்கின்ற இவர்களுக்குப் பெற்றோர்கள் இல்லையாயின் அவர்களைப் பராமரிக்கக்கூடிய இடங்களை அமைத்து, அங்கு அவர்களை ஒன்று திரட்டிக், கண்காணித்து, வளர்த்து, சமூகத்துக்குரியவர்களாக ஆக்கிக் கொள்வது சிறந்தது. அவ்வாறில்லாமல் குறித்தவகை இளைஞர்களுக்குப் பெற்றோர்கள் இருப்பது இனங்காணப்பட்டால் பெற்றோர்களை வழிப்படுத்துவது நல்லது.

தீபாவளியை அண்மித்த இரவு நேர வீதிகள் எங்கும் இவ்வகை இளைஞர்களின் தொல்லைகள் அதிகரித்திருக்கின்றன. தீபாவளி மாத்திரமன்றி சிறப்புத் தினங்கள் (வரம்தோறும் வருகின்ற ஞாயிறு விடுமுறை உட்பட) அனைத்திலும் வீதிகளில் இளைஞர்கள் கூடிப் பைலா பாடுவதும், நடனம் ஆடுவதும், கையில் சிகரெட்டுக்கள் ஏந்தியவர்களாகப் புகை விட்டுக்கொண்டிருப்பதும் அங்கே ஓர் ஓரத்தில் வைத்திருக்கின்ற போதைப் பானத்தை இடையிடையே பருகிப் போதையைத் தக்க வைத்துக்கொண்டிருப்பதும் நிகழ்கின்றன. இதனால், அந்த நேரத்தில், குறித்த வீதிகளால் போக்குவரத்துச் செய்கின்றவர்கள் பெரும் அவஸ்தைகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இந்த இளைஞர்கள் கூடுகின்ற இருட்டான, மறைவான வீதிகளுக்கு வெளிச்சம் பாய்ச்சி, பொலிஸ் தரப்பிரைக் கண்காணிக்கச் செய்வது அவசியமானது. யாழ்ப்பாண ரயில் நிலையத்துக்குச் செல்கின்ற சிறிய வீதி இதில் முதன்மையானது. எதிர் எதிராகப் பயணிக்கின்ற முச்சக்கர வண்டிகள் அந்த வீதியில் சந்திக்கும்போது ஒன்றை ஒன்று விலத்திக் கொள்வதற்குப் பெரும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. அத்தகைய வீதியிலும் இவ்வகை இளைஞர்கள் ஒன்றுகூடிக் குடித்துக் கும்மாளமடிப்பதைக் காணமுடிந்தது. அது மாத்திரமன்றி இரவு 7மணியளவில் தினமும் ரயில் ஒன்று கொழும்பு நோக்கிப் புறப்படுகின்றது. அதன் நிமித்தம் அவசரமாக அந்த வீதியால் பயணிக்கின்ற வாகனங்கள் இவர்களால் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகின்றன. அந்த 7மணி ரயிலைப் பிடிப்பதற்காகப் பெரியளவு சுமைகளுடன் அந்த நேரத்தில் அந்த வீதியூடாக விரைகின்றவர்களும் (படையினர் அல்லது பொலிசாராக இருக்கவேண்டும்), பெண்கள், வயோதிபர்களும் இவர்களால் பெரும் அசௌகரியத்துக்கு ஆளாகின்றனர். இத்தகைய இளைஞர்களைக் குறித்த வீதியில் மாத்திரமல்ல யாழ் நகரத்திலுள்ள இன்னும் பல வீதிகள், ஊர்மனைகள் தோறுமுள்ள பல வீதிகளிலும் காணக்கிடக்கிறது.

இவர்களுக்குப் பொற்றோர்கள் இருந்தால், அவர்களைக் கண்டறிந்து வழிப்படுத்துவதும், இல்லாவிடில் இந்த வகை இளைஞர்களை நல்வழிப்படுத்துவதும் அவசியமானது. முன்பெல்லாம் இரவானால் நாய்கள் தான் வீதியை ஆக்கிரமித்துக் கொள்ளும். இப்போது நிலமை மாறிவிட்டுள்ளது.

*வனராசா நெல்லியடி.*



## கொலை செய்யப்பட்ட ஜமாலின் உடலைக் கோரும் மகன்கள்!

வோஷிங்டன்.நவ.6




சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால், சவூதியில் கொலை செய்யப் பட்டமை உறுதியாகி உள்ளது. இந்த நிலையில் அவரின் மகன்மார்களான சலா மற்றும் அப்துல்லா ஆகியோர் தங்கள் தந்தையின் இறுதிக்கிரியைகளை முறையாக நிறைவேற்றவும், அதன் பின்னர் அவரது உடலைப் புனிதபூமியான சவூதயில் உள்ள மதீனாவில் நல்லடக்கம் செய்யவும் விரும்புகிறார்கள். அதற்காகச் சவூதி அரசரிடம் தங்கள் தந்தையின் உடலைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டுள்ளனர். ஜமாலின் மகனைச் சில நாள்களுக்கு முன்னர் சந்தித்த சவூதி மன்னர் ஜமாலின் கொலை பற்றிய தீவிர விசாரணை நடத்திக் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க உறுதி அளித்திருந்தார். ஜமாலின் உடலைப் பாகங்களாக வெட்டி, அவற்றை அமிலத்தில் கரைத்து விட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் தான் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

அமெரிக்காவிலுள்ள வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும், அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தவர் ஜமால். துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில் துருக்கி இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றபோது காணாமல் போயிருந்தார். இது தொடர்பாக, சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி வெளியிட்டது. ஜமாலைச் சவூதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன் அதற்கான ஆதாரத்தையும் வெளியிட்டது. துருக்கியில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்தின் உள்ளே ஜமாலின் விரல்கள் துண்டிக்கப்புட்டு சித்ரவதை செய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதாகவும் துருக்கி குற்றம் சாட்டியது. இதையடுத்து ஜமால் கொல்லப்பட்டதைச் சவூதி ஏற்றுக் கொண்டது. இந்த விவகாரம் பன்னாட்:டு அளவில் சவூதிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

## பிரான்சிலிருந்து பிரிவது தொடர்பான வாக்கெடுப்பு நியூ கலிடோனியா இணைந்திருப்பதற்கே ஆதரவு!

பாரீஸ்.நவ.6



பிரான்சிடம் இருந்து சுதந்திர்ம் பெறுவது தொடர்பான வாக்கெடுப்பு நியூ கலிடோனியாவில் நேற்று நடைபெற்றது. ஐரோப்பிய நாடான பிரான்ஸின் காலணித்துவ நாடாக தென் பசுபிக்கிலுள்ள நியூ கலிடோனியா உள்ளது. அங்கு பிரான்சிடம் இருந்து நியூ கலிடோனியா சுதந்திரம் பெற்றுத் தனிநாடாக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருந்தது. இந்த நிலையில், நியூ கலிடோனியா, பிரான்சின் ஒரு பகுதியாக நீடிக்க வேண்டுமா அல்லது சுதந்திரம் பெற்று தனிநாடாக வேண்டுமா என்பது குறித்து மக்களின் கருத்தை அறிய பொது வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

பிரான்ஸிலிருந்து விடுதலை பெற்றுத் தனி நாடாக அரசமைக்கலாமா அல்லது பிரான்ஸின் ஆளுகையிலேயே இருக்கலாமா என்பதற்காக நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் 56.4 சதவீதம் பேர் பிரான்ஸின் ஆளுகையிலேயே இருக்கலாம் என்று வாக்களித்துள்ளனர். பிரிந்து சென்று தனி நாடு அமைக்கலாம் என்பதற்கு ஆதரவாக 43.6 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பில் 81 சதவீதம் பேர் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். 1988ஆம் ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இது பிரான்ஸ் குடியரசின் மீதுள்ள நம்பிக்கையைக் காட்டுவதாக பிரான்ஸ் அதிபர் மக்ரோங் தெரிவித்துள்ளார்.

இந்த நியூ கலிடோனியாவில் மின்னணுச் சாதனங்கள் தயாரிப்பதற்குத் தேவையான நிக்கல் என்கின்ற உலோகம் தாராளமாகக் கிடைக்கிறது. பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் இந்தப் பகுதியை மிக முக்கிய பகுதியாகப் பிரான்ஸ் அரசு கருதுவது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் மீதான பொருள நடைமுறைக்கு

## அமெரிக்காவைக் கண்டித்து ஈரானியர்க பொருளாதாரத் தடையை உடைப்போம்

தெஹ்ரான்.நவ.6

ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நேற்று மு
இந்தப் பொருளாதார தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈரானில்
ரிக்கா விதித்துள்ள இந்தப் பொருளாதாரத் தடையை உடைப்பதில்
அதிபர் தெரிவித்துள்ளார்.

**பொருளாதாரத் தடையும் பாதிப்பும்**

ஈரான் மீதான பொருளாதாரத் தடை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதுபற்றிக் கூறிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஈரான் மீதான பொருளாதார தடை கடுமையாக இருக்கும். அது எப்போதும் இல்லாத வகையில் மிக பலம் வாய்ந்ததாக இருக்கும். என்ன நடக்கும் என்பதைப் பார்க்கத் தானே போகிறோம் என்றிருக்கிறார். ஈரானுக்கான இந்தத் தடை மூலம் எண்ணை ஏற்றுமதி, வங்கிச் சேவைகள், கப்பல் நிறுவனங்கள், விமான சேவை உள்ளிட்ட 700வகையான விடயங்களில் ஏரானுக்குப் பொருளாதாரப் பாதிப்புகள் ஏற்படும். மேலும் ஈரானில் நிலைகொண்டுள்ள அமெரிக்காவின் மிகப்பெரிய நிறுவனங்கள் 100 ஈரானில் இருந்து வெளியேறும். அதன் காரணமாக ஈரான் பொருளாதாரத்தில் கடும் சரிவு ஏற்படும்.

**எதிர்ப்பு**

அமெரிக்காவின் இந்தப் பொருளாதாரத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈரானில் பொது மக்கள் போராட்டம் நடத்தியுள்ளார்கள். ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு ஆயிரக்கணக்கானோர் கூடி அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார்கள்.

இதே போன்று மேலும் பல நகரங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன. ஈரான் இராணுவத்தின் போர் விமானங்கள் வானத்தில் பறந்து பயிற்சிகள் மேற்கொண்டன. நாட்டின் பாதுகாப்பு பணியில் பலம் வாய்ந்தவர்களாக இருப்பதைக் காட்டுவதற்கு இவை நடத்தப்பட்டன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதார தடைக்கு இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தத் தடையை ஏற்க மறுத்த இவர்கள் ஈரானுடனான வர்த்தகத்தை டொலர் இன்றி வேறு விதமான பணப் பரிமாற்றத்துடன் மேற்கொள்ள இருப்பதாகத் தெரிவித்தன.

**ஈரான் அதிபரின் கருத்து**

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைப் பெருமையாக உடைப்போம் என்று ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார். "அமெரிக்கா பொருளாதாரத் தடையைப் பயன்படுத்தி ஈரானின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியைக் குறைப்பதற்கு எண்ணுகிறது. ஆனால் நாங்கள் அமெரிக்காவின் தடையைப் பெருமையாக உடைத்துக் கச்சா எண்ணெயைத் தொடர்ந்தும் ஏற்றுமதி செய்வோம்" என்றிருக்கிறார். "அத்துடன் அமெரிக்க வரலாற்றிலேயே வெள்ளை மாளிகைக்குள் நுழைந்த நபர் ஒருவர் சட்டம் மற்றும் பன்னாட்டுப் பேச்சுக்களை மீறுவார் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

**பின்னணி**

ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார். ஈரானுடன் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் 2015ஆம் ஆண்டில் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் செய்து இருந்தன. அதில் இருந்து மீறிவிட்டதாக முறைப்பாடு எழுந்ததும் கடந்த மே மாதம் அமெரிக்கா அதிலிருந்து விலகியது.

விலகிய.கையுடன் ஈரான் மீது விலக்கி இருந்த பொருளாதாரத் தடையை மீண்டும் விதிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். எப்போதும் இல்லாத வகையில் பொருளாதாரத் தடை இருக்கும் என்றும் எச்சரித்தார். ஈரான் மட்டுமின்றி அதனுடன் வர்த்தக தொடர்பு வைத்திருக்கும் நாடுகளுக்கும் இந்தத் தடை பாயும் என்றும் தெரிவித்தார். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன. ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவு





டன் அந்த நாட்டி
களை அமெரிக்கா
இருந்து கச்சா எ
ஜப்பான், தென்

# கனடாவில் இரண்டு வானு விமானி ஒருவர் சம்பவ இ

ஒட்டாவா.நவ.6

கனடாவின் ஒட்டாவா நகர் அருகே நடுவானில் சிறியரக வானூர்திகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில், ஒரு வானூர்தியின் விமானி உயிரிழந்தார்.



கனடாவின் ஒட்டாவா நகர் அருகே கார்ப் என்ற பகுதியில் நேற்று ஒரு வானூர்தி பறந்துகொண்டிருந்தது. அப்போதே வான் பகுதியில் வந்த மற்றொரு சிறிய ரக வானூர்தி, திடீரென அந்த வானூர்தியின் மீது மோதியது. இதனால் இரண்டு வானூர்திகளும் நிலை குலைந்து தரையை நேக்கி வேகமெடுத்தன. இதில், சிறிய ரக வானூர்தி

# ருளாதாரத் தடை
# து வந்தது

## ர்கள் போராட்டம்
## பாம் ஈரான் சவால்

ற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அமெரிக்காவின் ஈரானில் பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். அமெ டப்பதில் பெருமைப்பட்டுக் கொள்ளப்போவதாக ஈரானிய







நாட்டின் மீது பொருளாதரத் தடை மரிக்கா விதித்து வருகிறது. ஈரானிடம் ச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா, தென் கொரியா உள்ளிட்ட 7 நாடுக ளுக்கு தற்காலிகமாக அமெரிக்க விலக்கு அளித் தது. அதேசமயம் திட்டமிட்டபடி ஈரான் மீது கடு மையான பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது.

# னூர்திகள் மோதல்
# இடத்திலேயே சாவு



வீதியோரத்தில் உள்ள புல்வெளியில் விழுந்து நொருங்கியது. அதன் விமானி சாவடைந்தார்.
அந்த வானூர்தியில் அவர் மட்டுமே பயணம் செய்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது. மற்றைய வானூர்தியின் விமானி வானூர்தியைச் சாமர்த்தியமாகத் திருப்பி ஒட்டாவா விமான நிலையத்தில் பாதுகாப்பாக விமானத்தை தரையிறக்கினார்.
இதனால் அதில் பயணம் செய்தவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்



# ரைட்டானிக் - 2
## உலகைச் சுற்றிவருவதற்குத் தயார்

சிட்னி.நவ.6
ரைட்டானிக்2 கப்பல் தனது பயணத்தை எப்போது தொடங்கும் என்று உலகமெங்கும் எதிர்பார்ப்புகள் எழுந்த நிலையில், 2022ஆம் ஆண்டில் பிரம்மாண்டமான அந்தக் கப்பல் இயங்கத் தொடங்கும் என்று அறிவித்திருக்கிறது ஆஸ்திரேலிய நிறுவனமான 'ப்ளூ ஸ்ரார் லைன்'.
1912ஆம் ஆண்டில் இரண்டாயிரம் பயணிகளோடு சவுத்தாம்ப்டனிலிருந்து அத்திலாந்திக் பெருங்கடல் வழியே நியூயோர்க் செல்லும் வழியில் பனிப்பாறைகளில் மோதி கடலில் மூழ்கியது ரைட்டானிக்.
பல ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அதே வடிவத்தில் அந்தக் கப்பலைக் கட்டும் முயற்சியில் இறங்கியது 'ப்ளூ ஸ்ரார் லைன்'. ஒன்பது அடுக்குகள், 835 அறைகளுடன் 2ஆயிரத்து 435 பயணிகளை ஏற்றிச்செல்லும் வகையில் இந்தக் கப்பல் தயாராகிவருகிறது. முதல் பயணம் ரைட்டானிக்கைப்போல சவுத்தாம்ப்டனிலிருந்து நியூயோர்க் வரை என்றே அறிவிக்கப்பட்டிருக்கிறது. டைட்டானிக் கப்பலுக்கு ஏற்பட்ட விபரீதத்தைத் தவிர்க்கும் வகையில், அதிநவீன ரேடார் உள்ளிட்ட சகலவிதமான வசதிகளோடும் அதிகளவில் உயிர் காக்கும் படகுகளுடனும் இந்தக் கப்பல் தயாராகிக் கொண்டிருக்கிறது என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# 5ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமேசனில் கொக்கோ!


கனடா,நவ.6
சொக்லேட் தயாரிக்கப்படுவதற்கு மூலப் பொருளாக விளங்குவது கொக்கோ. கொக்கோத் தாவரம் 5ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே அமேசான் மழைக்காடுகளில் வளர்ந்தது என்று தாவரவியல் சான்றுகள் மூலம் தெரியவந்துள்ளது.
ஈக்வெடார் நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பூர்வக்குடி மக்கள் பயன்படுத்திய பானையிலுள்ள எச்சங்களை ஆய்வு செய்ததில் அவர்கள் சொக்லேட் தயாரிக்கப்படும் கொக்கோவை உணவு, பானம் அல்லது மருந்தாகப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
இதற்கு முன்புவரை சாக்கலேட் மத்திய அமெரிக்காவில் முதல் முறையாக தோன்றியதாகவே கருதப்பட்டது.
'இதற்கு முன்னர் கிடைத்த ஆதாரங்களைவிட இந்த தாவரம் சுமார் ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னரே பயன்படுத்தப்பட்டது இதன் மூலம் தெரியவந்துள்ளது.' என்று இது பற்றிய ஆய்வில் ஈடுபட்ட கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்திலுள்ள மானிடவியல் துறையின் பேராசிரியரான மைக்கல் பிளேக் கூறியுள்ளார். 'இதற்கு முன்னர் கிடைத்த பழமையான கோகோ எச்சங்கள் மெக்ஸிக்கோ, மத்திய அமெரிக்காவில் கண்டெடுக்கப்பட்டன.' என்று அவர் மேலும் கூறியுள்ளார்.
ஈக்வடாரிலுள்ள சாண்டா அனா என்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அந்தப் பானையை ஆய்வு செய்ததில் அது 5ஆயிரத்து 300 முதல் 2ஆயிரத்து 100 வருடங்களுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.
அந்த இடத்தில் கிடைத்த பானையிலுள்ள எச்சங்கள், 'டி.என்.ஏ' (மரபணு) ஆகியவற்றை ஆய்வு செய்ததில், அதில் கொக்கோவின் விதைகள் பல வகையான பொருள்களுடன் கலக்கப்பட்டுப் பானமாக குடிக்கப்பட்டது தெரியவந்துள்ளது.
'இந்த உலகுக்கு அமேசன் அளித்த மற்றொரு பரிசாக இதை கருதுகிறோம். அதுமட்டுமின்றி, அமேசானின் இயற்கை வாழ்விடத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மற்றொருமுறை இது உணர்த்துகிறது.' என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




# ஜப்பானில் நிலநடுக்கம் பீதியில் மக்கள் ஓட்டம்

டோக்கியோ.நவ.6
ஜப்பானில் உள்ள ஹோக்கய்டோ தீவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.
இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. அதன் காரணமாகப் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.
இந்த நில நடுக்கம் 5.9 ரிக்கடர் அளவில் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. ஜப்பானின் வடகிழக்கில் ஷிபெட்சூ பகுதியில் இருந்து 107 கிலோ மீற்றர் தூரத்தில் பூமிக்கு அடியில் 8 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சேத விவரங்கள் வெளியிடப்படவில்லை.
ஹோக்கய்டோ தீவில் செப்டெம்பர் மாதம் 6.6 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில், நிலச்சரிவால் வீடுகள் மண்ணில் புதைந்ததும் 40க்கும் மேற்பட்டோர் சாவடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# உயிரை மாய்க்கும் எண்ணம் என்னை வாட்டியது: சுயசரிதையில் மனம் திறந்த ஏ.ஆர். ரஹ்மான்!




தன்னுடைய 25 வயது வரை தவறான முடிவைஎடுத்துஉயிரைமாய்க்கும்எண்ணம்தன்னைவாட்டியதாகபிரபலஇசையமைப்பாளர்ஏ.ஆர்.ரஹ்மான்தெரிவித்துள்ளார்.

ஒஸ்கார்நாயகன்எனக்கொண்டாடப்படும் ஏ.ஆர்.ரஹ்மான், தன் சுயசரிதையை 'NotesofDream'என்றபெயரில்புத்தகமாக எழுதியுள்ளார். அதன் வெளியீட்டு விழா மும்பையில்நடைபெற்றது.

அப்போது பேசிய அவர், "அவ்வப்போது நம்மில் பலரும், நாம் சிறப்பானவன் கிடையாது என நினைக்கிறோம். எனது 25 வயது வரை, தவறான முடிவை எடுத்து உயிரை மாய்க்கும் எண்ணம் என்னை வாட்டியது. நான் என் தந்தையை இழந்ததால் இவ்வாறு உணர்ந்திருக்கிறேன். அதன்பின் பல நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன.

அவை எல்லாமும் செயலற்றுப் போனதாக இருந்தன. என் தந்தையும் இறந்துவிட்டதால், நான்அதிகதிரைப்படங்களை ஏற்கவில்லை.எனக்கு35திரைப்படங்கள் கிடைத்தது. அவற்றில் நான் இரண்டை மட்டுமே தேர்வு செய்தேன்.

இந்த எண்ணம் ஒருவிதத்தில் எனக்குள் தைரியத்தை ஏற்படுத்தியது. மரணம் அனைவருக்கும் நிரந்தரமான ஒன்று. எல்லாவற்றுக்கும்முடிவுகாலம்இருக்கும் போது, ஏன் பயம் கொள்ள வேண்டும்? என் வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகள்எனக்குள்தைரியத்தைஏற்படுத்தின" எனத்தெரிவித்துள்ளார்.









இப்படிக் கொண்டாடப்பட்ட தீபாவளிகளும், பண்டிகைகளும் இனி நினைவுகளோடு மட்டுமே நிலைத்திருக்கும்




## twitter



இலங்கையைப் பாத்தா
பொறாமையா இருக்கு..
எவ்வளவுசுலபமாதலைமை
அமைச்சரை மாத்தறாங்க..

## 'பல்டி' அரசியல்

குதிரைப்பேரம், குத்துக்கரணம் என அநாகரீக அரசியலுக்கே உரித்தான அனைத்துச் சம்பவங்களும் கொழும்பு அரசியலில் நடந்தேறிவருகின்றன. இதனால், 24மணிநேரமும்அரசியல்களம்கொதிநிலையில் காணப்படுவதுடன், உச்சகட்டப் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

ரணில்மற்றும்மைத்திரி - மகிந்த கூட்டணிக்கிடையிலான மோதல் உச்சம் தொட்டுள்ளநிலையில் இறுதி நொடிகூடத் திருப்புமுனையாக அமைவதற்குரிய சாத்தியக்கூறுகளேபிரகாசமாகதென்படுவதால்'பல்டி' அடித்தவர்களும், தாவலுக்குத்தயார்நிலையில்இருப்பவர்களும் விழிபிதுங்கி நிற்கின்றனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித மான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் வந்து விலகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணிகளை நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் உண்டாகும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** சிலர் சுயநலத்துடன் உங்களை அணுகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** உங்கள் பேச்சில் வசீகரம் உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும். பெண்கள் தர்ம சிந்தனையுடன் செயல்படுவர்.

**துலாம்:** பேச்சு, செயலில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும். வருமானம் உயரும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**தனுசு:** சவால்களை ஏற்று தடைகளை தகர்த்தெறிய முயல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால்சாதனைபடைப்பீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** மனதில் அதிருப்தி உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மீனம்:** மனதில் தைரியம் குடியிருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.



# தீபாவளிப் பண்டிகை

- இன்று தீபாவளித் திருநாள்
- இந்தத் திருநாளை உலக நாடுகளிலுள்ள அனைத்து இந்துக்களும் கொண்டாடி மகிழ்கிறார்கள்
- இந்த நாளைத் தீமை அழிந்து நன்மை கிடைத்த நாளாகவே அவர்கள் கொண்டாடுகிறார்கள்
- இந்து சமயப் புராணங்களில் மூன்று விதங்களில் தீமை அகன்று உலகுக்கு ஒளி கிடைத்ததாகக் கூறப்படுகிறது.
- விஷ்ணு அவதாரமான கிருஷ்ணர் கொடிய அரக்கரான நரகாசுரனை வெற்றி கொண்டு தருமத்தை நிலைநாட்டிய தினமாகவும், சக்திதேவியார் 21நாள் கேதார கௌரி விரதம் முடித்து சிவனுடன் சேர்ந்து சிவன் சக்தியாக (அர்த்தநாரீஸ்வரராக) உருவெடுத்த நாளாகவும் கூறப்படுகிறது.
- தீமை அழிந்து ஒளி பிறந்த நாளாகவே இந்த நாளை எல்லோரும் கொண்டாடி மகிழ்கின்றனர்.
- மக்கள் இந்த நாளில் அதிகாலையில் எழுந்து தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்துப், புத்தாடை தரித்து, ஆலய தரிசனம் முடித்து, பட்டாசு வெடித்து, பலகாரம் செய்து குடும்பத்தவர் உற்றார், உறவினர், நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வர்.
- வீடுகளில் வரிசை வரிசையாக விளக்குகளில் தீபம் ஏற்றித் துன்பம் ஒழிந்து ஒளி பிறந்த நாளாகக் கொண்டாடுவர்.
- அதனால் ஒவ்வொருவர் மனதிலும் இருக்கும் அகங்காரம், கோபம், பொறாமை போன்ற குணங்கள் அத்தனையும் ஒழிந்து போவதாகவும் இந்த நாளை எண்ணிக் கொள்வர்.
- சிறுவர்களுக்கெல்லாம் இந்தத் தீபாவளிப்பண்டிகை வானவேடிக்கை நிகழ்வாகும்.

## அறிவோம்

1. இரகசியத்தை ஊமைப் பெண்ணிடம் கூறு அவள் பேசத் தொடங்கிவிடுவாள்

**சீனப்பழமொழி**

3. மழைக்காகப் பிரார்த்தனை செய்யச் சென்றால் குடையை எடுத்துச் செல்ல மறக்காதே

**வோல்டேர்**

3. சண்டைக்கு இருவர் தேவை. ஆனால் அவ்விருவரில் நீங்கள் ஒருவராய் இருக்காதீர்கள்

**அல்பா**

4. மனிதன் மிக உயரமான உச்சியை அடையலாம். ஆனால் அங்கேயே நீண்ட நாள் தங்க முடியாது.

**பெர்னாட்ஷா**

5. ஒரு மனிதனின் ஆழமான வெளிப்பாடு என்பது அமைதியான மௌனம்தான்.

**லாவோஷ**

6. இறந்து போனவனின் செருப்புக்களுக்குக் காத்திருப்பவன் வெறுங்கால்களுடனே நடக்கவேண்டி வரும்

**ஸ்பானியப் பழமொழி**



# 'சூறாவளி' சுழல் காற்று

சுழல் காற்றுக்களும் சூறாவளிகளும் பெரும்பாலும்ஆண்டின்பின்பகுதிகளில் பெரும் இடர்களை ஏற்படுத்துவது வழமையானஒருவிடயம். அத்தகையதான பெரும் காற்றுத் தொகுதியே சூறாவளி என்றுகுறிக்கப்படுகிறது. இந்தக்காற்றுப் படைசுழன்றுகொண்டுநகரும்தன்மையுடையது. பூமியில் சூறாவளிகள். உருவெடுக்கும் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அவை இரண்டு வகைப்படுத்தப்படுகின்றன.

1. வெப்பவலயச்சூறாவளி
2. இடைவெப்ப வலயச் சூறாவளி என்பன


மத்திய கோட்டுப் பகுதிகளில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக வெப்ப வலயச்சூறாவளிகள் உருவாகின்றன. அதாவது குறித்த பகுதிகளில் நிலவும் கடும் வெப்பத்தால்காற்றுப்படைவிரிவடைந்து மேல் எழுகிறது. ஒரு பகுதியிலிருந்து பெருமளவான காற்றுப்படை மேலெழுந்து அவ்விடம் வெற்றிடமாகிறது. இதைத் தாழமுக்கம்என்பர்.

அந்த வெற்றிடத்தை நிரப்பிக் கொள்வதற்கு அதைச் சூழ்ந்த பகுதிகளிலிருந்து காற்றுப்படை வேகமெடுக்கின்றது. பல திசைகளிலிருந்துவரும்காற்றுஓர் இடத்தில் குவியும் போது சுழற்சிக்கு உட்படுகிறது. சுழற்சியு டன் அது நகரவும் ஆரம்பிக்கிறது. தொலைதூர நகர்வின் பின்னர் அதன் சுழற்சி வேகமும் நகர்வும் தணிந்து போகின்றன.

அதுவரை சுழற்சியுடன் நகரும் போது காற்றுப்படை கடல் மற்றும் தலைப்பரப்பில் பல அசாதாரண மாற்றங்களை ஏற்படுத்திச் செல்கிறது.

இடைவெப்ப வலயச் சூறாவளிக்கும் இதுவே அடிப்படைப் பண்பு. ஆனாலும் இங்கு களிரான காற்றுப்படையும் வெப்பக்காற்றுப்படையும் ஒன்றுடன் ஒன்று சேர்க்கையில்ஏற்படும்சுழற்சியேசுழல் காற்றைத் தோற்றுவிக்கின்றது. கரீபியன்கடல்பகுதிகளில்உருவாகும்அயன மண்டலச் சூறாவளி யைக் ஹரிக்கோனை எனவும் தென்சீனக்கடல், தென்கிழக்காசியப்பகுதிகளில்'தைபூன்' எனவும் அழைக்கின்றனர். கரூபியன் தீவுகள்அமெரிக்காவைச்சமீபத்தில்தாக்கிய இர்மா,மரியா போன்றனவும் இத்தகைய சக்தி வாய்ந்த வெப்ப மண்டலச் சூறாவளிகளேயாகும்.

எமது நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குசூறாவளிகளின்செல்வாக்கினால் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் கடுமையான மழைவீச்சி கிடைக்கின்றது.




# மனிதனில் கடவுளைக் காண



அது ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் இறைவன் மேல் அளவற்ற ஈடுபாடு கொண்ட ஒருவன் இருந்தான். "எப்போதுமே இறைவன் காப்பாற்றுவார்" என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவனுள் பதிந்திருந்தது. ஒருமுறை அந்தக் கிராமத்தியில் புயல் வீசியது. பின்னர் மழைபெய்தது. மழையென்றால் பெருமழை. புயலும் மழையும் ஒரு சேர அடித்த காரணத்தால் கிராமத்தில் நின்ற மரங்கள் எல்லாம் வேருடன் கீழே சரிய ஆரம்பித்தன. கிராமத்தியில் இருந்த பெரியகுளமும் உடைப்பெடுத்தது. கிராமத்தைநீர்சூழ்ந்துகொண்டது. மக்கள் எல்லோரும் வெள்ளத்தில் இருந்து தப்பிக்கப் பலவித உபாயங்களைக் கையாண்டனர்.

இறைவன் மீது அதீத ஈடுபாடு கொண்ட பக்தனோ அவர்களைப்பார்த்துவாய்விட்டுச்சிரித்தான். "இறைவனில்உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? இப்படி ஏன் அங்கலாய்த்துக் கொண்டு ஓடித் திரிகிறீர்கள்" என்றான். மேலும் "நான் இறைவனில் பரிபூரணநம்பிக்கைகொண்டவன். உங்களைப்போலஇப்படிப்பிறந்தகிராமத்தை விட்டுஓடமுயற்சிக்கமாட்டேன். என்னை இறைவன்காப்பாற்றுவார்"என்றுசத்தமாகச்சொன்னான்.

"அடபைத்தியக்காரப்பயலே"என்றுஎண்ணியவாறு மற்றவர்கள் பலவழிகளிலும் அங்கிருந்து தப்பிச் சென்றனர். பக்தனுடைய வீட்டுக்குள் வெள்ளமட்டம் ஏறிக் கொண்டே செல்ல அவன் தன் வீட்டுக் கூரையின் மேல் ஏறி நின்று கொண்ட உருக்கமாகக் கடவுளைப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினான். அப்போது வழியே ஒரு படகு விரைந்து வந்தது. அதில் பக்கத்துக் கிராம மக்கள் பலரும் உள்ளூர் மக்கள் சிலரும் இருந்தனர். அதில் இருந்தவர்கள் பக்தன் கூரை மேல் நிற்பதைக் கண்டு "விரைவாக எம்முடன் வந்து விடு இருக்க இருக்க வெள்ளம் கூடிவிடும்" என்றனர். அவனோ "நீங்கள் போங்கள் என் பிரார்த்தனை பயனளிக்கும்"கடவுள்என்னைநிச்சயம்காப்பாற்றுவார் எனக் கூறி அவர்களை அனுப்பிவிட்டான். இப்போது வெள்ளம் வீட்டின் கூரையைத் தொட்டது. அவன் சட்டென்று தாவி அங்கிருந்த மரக்கிளையில் ஏறி அதன் உச்சிக்குப் போய்விட்டான். இப்போது மற்றொரு படகும் அவ்வழியே வந்தது. அவர்களும் அவன் மேல் இரக்கப்பட்டு தம்முடன் வரும்படி அழைத்தனர். அவனோ "இல்லை முதலில் கூரையில் இருந்த என்னை மரம் காப்பாற்றியது. இனி இறைவன் வந்து என்னைக் காப்பாற்ற வெகுநேரமாகாது. நீங்கள் போங்கள்" என்றான். அந்தப்படகும்போயிற்று. இப்போது இரவாயிற்று. நீர்மட்டம்வரவர உயர்ந்தது. பக்தன்வெள்ளத்தில்அடித்துச் செல்லப்பட்டுஉயிரிழந்துபோனான்.

இப்போது அவன் சொர்க்கத்தை வந்தடைந்தான். அவன் தன்னை இறைவன் வந்துகாப்பாற்றவில்லையேஎன்றுகடும் கோபத்தில் இருந்தான். அப்போது அவன் இறைவனைக் காண நேரிட்டது. கடவுளிடம் நியாயம் கேட்டான். கடவுளோ "பக்தனே நீ என் பக்தன் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால், நான் உன்னைப் பல முறை காப்பாற்ற உன்னைத் தேடிவந்தேன்.-ஆனால்நீதான்என்னை அலட்சியம்செய்துவிட்டாய்" என்றார். பக்தனோ "நீங்கள் எப்போது என்னைக் காப்பாற்ற முயற்சித்தீர்கள்?" என்றான்.

"பக்தனே உன்நிலைபுரிந்துஉன்பிரார்த்தனையைக்கேட்டுஉனக்குப்பலசந்தர்ப்பங்களைக் கொடுத்தேன். அந்தச் சந்தர்ப்பங்களில் நான் படகுகளில் இருந்து உன்னைஅழைத்தேன். நீஅதற்குச்செவிசாய்க்கவில்லை. நீ ஒன்றைப் புரிந்து கொள். எந்தச் சந்தர்ப்பத்திலும் கடவுள் உதவுவதற்கு நேரே வருவதில்லை. ஒரு மனிதனையோ, அல்லது ஒருபொருளையோ தான் தனக்காகப் பயன்படுத்துவார்.

உன் உற்றார் , உறவினர், சுற்றத்தார், நண்பர்எனநீசந்திக்கும்ஒவ்வொருமனிதரிலும் நீ கடவுளைக் காண். அப்போது மனிதன்தெய்வமாவான். மேலும்சந்தர்ப்பங்கள்கிடைக்கும்போது நாம் அவற்றை பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பின்பு நாம்தேடினாலும்அவைகாதுகளில்ஒலித்துக்கொண்டிருந்தன.

# நற்சிந்தனைகள் வாழ்வில் பலம் பெறட்டும்



சிவரம்யா

இந்து சமயத்தவர்கள் இறைபக்தியில் சிறந்தவர்கள். சைவத்தமிழர்கள் பண்பாட்டில் சிறந்த வர்கள். காலங்காலமாகக் கலாசாரத்தை மதித்து வாழ்பவர்கள். அன்பும், அறமும் பேணுபவர்கள். தான தருமங்கள் செய்பவர்கள். அந்தவகையிலே தமிழர்களின் பண்டிகையாம் இனிய தீபாவளித் திருநாளை இன்றைய தினம் எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

இந்தப் பண்டிகை புராணக் கதையுடன் தொடர்புடையது. நரகாசுரன் என்ற அசுரன் தானே பெரியவன் என்னும் அகங்காரம் கொண்டு தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். கிருஷ்ண பகவான் அவனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றினார். இறக்கும் தறுவாயில் உண்மையை உணர்ந்த நரகாசுரன், "பகவானே!, கொடியவனாகிய யான் இறந்துபோகின்ற இந்த நன்னாளை என்றும், எங்கும், யாவரும் மங்களகரமாகக் கொண்டாடி மகிழ்ந்து இன்புறல் வேண்டும். இந்த நாளில் என்னை நினைவுகூர்ந்து நீராடித் தூய ஆடைகளை உடுத்தி ஆலய தரிசனஞ்செய்து, தான தர்மம் செய்வோருக்கு அசுவமேத யாகஞ்செய்த பலன் கிடைக்க அருள் புரிதல் வேண்டும்." என வரம் வேண்டினான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் அதுவிதமே வரமருளினார்.


தீபாவளி தினத்தன்று அதிகாலையில் துயில் எழுந்து, எண்ணெய் தேய்த்து நீராடி, ஆலய தரிசனம் செய்ய வேண்டும். மேலும் புண்ணியச் செயல்கள் செய்யவேண்டும். உபவாச விரதம் கடைப்பிடித்தல் உத்தமம். இந்தநாள் ஆன்மாக்கள் நரக வழியினின்றும் நீக்கப்படும் நற்பாக்கிய நிலையைக் குறிப்பதாகும். நாம் பாதகச் செயல்களில் இருந்து விலகியி ருத்தல் நன்மைபயக்கும். இந்த நாளில் உபவாசமிருந்து விஷ்ணு நாமங்கள் கூறி விஷ்ணு தரிசனம் செய்வோருக்கு வைகுண்ட மோட்சம் கிடைக்கும் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன.
இந்தியாவிலும், இலங்கையிலும் மற்றும் இந்துக்கள் வாழும் சில நாடுகளிலும் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபம் ஒளியைத் தருவது. இருளை நீக்குவது. அதனால் தீபஒளி வழிபாட்டுக்குரியதாயிற்று. இயற்கையை வழிபட்டு வந்த எம்மக்கள் தீயை வழிபட்டனர். பெரிதும் மதித்தனர். தினமும் தீபம் ஏற்றி ஆலயங்களிலும் இல்லங்களிலும் வழிபடுவதை நாம் அறிவோம்.

வடஇந்திய மக்கள் தீபாவளி தொடர்பாகக் கதை ஒன்று கூறுவர். இராமபிரான் வனவாசத்தை முடித்து, அதன்பின் இராவண சங்காரத்தையும் நிகழ்த்தி வெற்றித் திருமகனாகச் சீதா பிராட்டியுடன் அயோத்திக்குத் திரும்பிய திருநாளில் மக்கள் தத்தம் இல்லங்கள் தோறும் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அதன் பின் ஆண்டுதோறும் அந்தத் திருநாளை நினைவுகூர்ந்து தீபாவளியைக் கொண்டாடி வருகின்றனர். வடஇந்திய மக்கள் இவ்வாறு தீபாவளியின் தோற்றத்தைக் குறிப்பிடுகின்ற னர்.
இந்தப் பண்டிகைகள் தனி மனித நல்வாழ்வையும், சமூகத்தின் நல்வாழ்வையும் கருதியே நல்ல சிந்தனையுடன் நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டவை. இறைவனையும் இயற்கையையும் நல்ல நாள்களில் நினைத்துப் போற்றுகின்றோம். இந்தநாள்கள் இறைவன் பற்றிச் சிந்தித்து, நல்ல சொல் கூறி, நல்ல செயல் புரிய உதவுகிறது. அறியாமை அகன்று, அசுரத்தன்மை அகன்று, தீய எண்ணங்கள் அழிந்து நன்மை பெருக வேண்டும்.
தமிழர் தாயகத்தைப் எடுத்துநோக்கின், தீபாவளித் திருநாளில் ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று பிரசாதம் வழங்கப்படும். இல்லங்கள் அழகாக அமைக்கப்பட்டு, இனிய சுவையான பட்சணங்கள் சமைத்து நண்பர், அயலவர், உறவினருடன் அன்பு கொண்டு பகிர்ந்துண்டு மகிழ்வர்.

நல்ல சிந்தனைகளுடன் நாம் புதிதாய்ப் பிறந்ததாக எண்ணி பழையவற்றை நீக்கி மகிழவேண்டும். 'எரிச்சல், கோபம், அகங்காரம், பணஆசை, பெருமை, மோகம், காமம், ஆசை' போன்ற தீயகுணங்களை நீக்க வேண்டும். இறைவனைப் பிரார்த்தித்து மனதில் உறுதியுடன் நல்லவற்றை எண்ணி வாழ முயற்சிக்க வேண்டும். ■

# தீபங்களின் ஒளி அமைதியை வியாபகம் செய்யட்டும்!

க.தமிழ்தாசன்



தீபாவளிப்பண்டிகையை தேசியப் பண்டிகை என்றே பொருள் கொள்ளலாம். ஏனெனில் மதம், மொழி, கலாசாரம் சார்ந்து ஏனைய பண்டிகைகளுக்கு மக்கள் காட்டிவருகின்ற ஆர்வமிகுதியையும் வேறுபாடுகளையும் கடந்து சிறப்புப் பெற்ற திருநாளாகத் தீபாவளியைக் கொண்டாடிவருகின்றனர். தீபாவளி என்ற சொல்லுக்கு "தீபங்களின் வரிசை" என்று பொருள் கூறப்படுகிறது. மகாளய அமாவாசைக்கு அடுத்த தினம் முதல் ஒன்பது இரவுகள் நவராத்திரி விரத அனுட்டானம் இடம்பெறும். அடுத்த அமாவாசை தினத்துக்கு முன்பான நாள் தீபாவளித் திருநாள்.

**நரகாசுர வதம்**
நரகாசுரன் என்ற கொடிய அரக்கனைக் கொன்று மக்களுக்கு மகிழ்ச்சியளித்தார் மகா விஷ்ணு. நரகாசுரனைத் தானே சம்காரம் செய்யாது தன் மனைவியான சத்திய பாமாவே அவனை அழிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு போர்க்களத்தில் மயங்கினார். தேரில் சரிந்து விழுந்து மாயம் புரிந்தார். தன் தாயைத் தவிர வேறு எவராலும் இறப்பு ஏற்படக் கூடாது என்ற வரத்தைப் பெற்றவன் நரகாசுரன். ஆனாலும் போர்க்களத்தில் எதிரியாக நின்ற 'நரகன்' தன் மகன் என்பதைச் சத்தியபாமா அறிந்திருக்கிவில்லை. அவளுக்குத் தெரியாதபடி மாயம் செய்தான் கண்ணன். ஆக, கணவரைக் காக்க தேரோட்டியாகப் போர்க்களம் புகுந்த சத்தியபாமா தன்னுடைய வில்லை வளைத்து நரகாசுரனை வீழ்த்தினாள்.



**நரகாசுரன் கேட்ட வரம்**
உயிர் பிரியும் தருணத்தில் அரக்க தேகமுடைய நரகாசுரன் ஞானம் பெற்றான். "எனது ஆன்மா இந்த உடலை விட்டுப் பிரிந்து செல்லும் இந்தத் தினத்தை மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும். நான் கொண்ட கொடிய செயல்களால் இருள் சூழ்ந்திருந்த இல்லங்கள் அனைத்தும் ஒளி பெற வேண்டும். மக்கள் மங்கல நீராடிப் புத்தாடை உடுத்தி, விருந்துண்டு களிக்க வேண்டும்" என வரம் அருள வேண்டி நின்றான். அவன் விருப்பம் நிறைவேறும் விதமாக மகா விஷ்ணுவானவர் அவன் வேண்டிய வரத்தை அருளினார்.

**'நரக' சதுர்த்தி!**
நரகாசுரனை வதம் செய்த தினத்தையே தீபாவளிப்பண்டிகையாகக் கொண்டாடி வருவதாக ஒரு ஐதிகம். அதன்படி அந்தத் தினத்தை 'நரக சதுர்த்தி' என்றும் சான்றோர் அழைக்கின்றனர். தீயவை அழிந்து வாழ்வில் சுபிட்சமும் மகிழ்வும் உண்டாகிட தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

**'ஸ்நானம்' செய்தல்**
தீபாவளிப் பண்டிகையின்போது குடும்பத்தில் உள்ள அனைத்து அங்கத்தவர்களும் அதிகாலைப் பொழுதிலேயே எழுந்து கொள்கின்றனர். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து தூய்மை பெறுவர். தீபாவளிப் பண்டிகையின் வரவை எண்ணிக் களிக்கும் குழந்தைகள் புத்தாடைகளையும், பட்சணங்களையும் வரவேற்று உபசரித்த மகிழ்வர்.


**புத்தாடைகளும் மஞ்சள் மகிமையும்!**
புத்தாடைகளுக்கு மஞ்சள் பூசிக் கொள்ளும் சிறப்பை தீபாவளிப் பண்டிகைக்காலத்தில் கண்டுகொள்ள முடியும். பூசை அறையில் உள்ள இறை எழுந்தருளல்கள் முன்பாக முதல் நாள் இரவுப் பொழுதே இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வர். அதிகாலையில் எழுந்ததும் குத்து விளக்கேற்றி, ஊதுபத்திகளை நறுமணம் வீசச் செய்து, அதிகாலையில் நீராடி உடற் தூய்மை பெற்றுக் கொள்வர். பின்பு புத்தாடைகளைப் பெரியவர்களின் ஆசீர்வாதத்தோடு பெற்று அணிந்து கொள்வர். இறைவழிபாடு இயற்றி பெரியவர்களை வணங்குவர். பின்பு பட்சணங்களையும் இனிப்புக்களையும் மகிழ்ச்சியுடன் உண்டு களிப்பர்.
இத்தகு மகத்துவச் சிந்தனைகளோடு சிறப்புற்று விளங்குகிறது தீபாவளிப்பண்டிகை. இந்தத் திருநாளில் தீமைகள் விலகி அமைதி நிலைத்திட நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களிடத்தில் அன்பாக இருப்போம். மகிழ்ச்சியைப் பகிர்ந்து உறவைப் புதுப்பொலிவுற அரவணைத்து தீபாவளியை கொண்டாடுவோம். ■

## அமரர் சபரிமுத்து அருமைநாதன்

அவர்களின்

# 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**இறப்பு: 06.11.1978**



நாலு பத்து ஆண்டுகள் கடந்தாலும் நல்லவர்கள் உள்ளத்தில் இன்றும் வாழ்கிறீர்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக நாரந்தனைக் கிராமச்சங்கத்தில் உறுப்பினராயும் அக்காலப் பகுதியில் எட்டு ஆண்டுகளாக அச்சங்கத்தின் தலைவராகவும் சமாதான நீதவானாகவும் (JP) பணியாற்றி நாரந்தனைக் கிராமச்சங்கத்திற்கு பல்வேறு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப் படுத்தினார். தன்னலமற்ற சமூக சேவையாளர் என்றும் அவரது நினைவில் வாழும்.

**மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், உற்றார்,**
**உறவினர்கள், ஊரவர்கள்.**

**தகவல்: அ.சர்வநாதன் (மகன்)**

---

# நீங்கா நினைவலைகள்

## முதலாம் ஆண்டு 10ஆம் ஆண்டு

தோற்றம்
25.04.1965





தோற்றம்
26.03.1963

மறைவு
18.10.2017

திதி:சதுர்த்தசி

மறைவு
26.11.2008

**அமரர் நடராஜா மனோராஜன்**

**திருமதி சாந்தி ஜெயசீலன்**

ஆண்டுகள் பல ஆயிடினும் அன்பு முகம் மறக்கவில்லை
இன்று உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர் இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சந்தி!!!

**பழைய வீதி,**
**கோப்பாய் தெற்கு.**

என்றும் நினைவில்
**குடும்பத்தினர்.**

---

# UNIVERSITY OF JAFFNA

## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2017/2018)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2017/2018

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.
   OR
   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.
   AND
2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar, Envelope (for Rs. 5.00) not less than 9"x 4" size.

**Date of closing is 30th of November 2018.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**REGISTRAR**

(c/8253)

---

# வாடிக்கையாளர் கவனத்துக்கு

எமது அரிசி ஆலையில் புதிய தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக சில மாதங்கள் அரிசியின் தரத்தில் ஏற்பட்ட தவறினை தற்போது திருத்தம் செய்துள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**Maapiyan Mill**
**Maapiyan mill Road,**
**Suthumalai, Manipay. 077 772 2215**

(CS 21049/15/17)

---

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
ஊர்காவற்றுறை

# வாகனம் விற்பனைக்கு

எமது சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் இரண்டு வாகனங்களும் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் எமது தலைமை அலுவலக நேரத்தில், மேற்படி இரண்டு வாகனங்களையும் பார்வையிட்டு, கேள்வி கோரல் கடிதங்களை 21.11.2018 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ கிடைக்கக்கூடியதாக "பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**இரண்டு சக்கர உழவு இயந்திரம்** - (NPHP - 1765)
**முச்சக்கர வண்டி** - (NPGN - 2032)

(IN/8252)(10)

**பொதுமுகாமையாளர்.**

தொலைபேசி இல. **021 22 1 648**

---

## மரண அறிவித்தல்

### டாக்டர் திருமதி சந்திராதேவி கமலநாதன்



கந்தரோடை வீதி, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் தமிழ்நாடு திருச்சியை வாழ்விடமாகவும் கொண்ட டாக்டர் திருமதி சந்திராதேவி கமலநாதன் 02.11.2018 வெள்ளிக்கிழமை திருச்சியில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை (ஆசிரியர்) - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், கமலநாதன் (திருச்சி) இன் அன்பு மனைவியும், செல்வி சிவதி (திருச்சி) யின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.11.2018 ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அண்ணாவிவளவு**
**K.K.S. வீதி, சுன்னாகம்.**

**தகவல்:**
**பொ. மாதவராஜா**
**021 224 2046**

(c7956)

---

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

உதயன்

---

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு

**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு 04.11.2018 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பார்வதி தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னட்டி-செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசின் (ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்) அன்பு மனைவியும், ஆதவன் (அஞ்சலகம் - யாழ்ப்பாணம்), கலாநிதி பத்மதாஸ் (சிரேஷ்ட விரிவுரையாளர் - பௌதீகவியல் துறை, யர்ழ்.பல்கலைக்கழகம்), உதயமலர், விஜயமலர் (சின்னக்கிளி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசல்யா, Dr.ஜெயதட்சாயினி (அரச கால்நடை வைத்தியர்), முருகேசு, சுரேஸ், ஜனனி(யானு), துவாரகன் (யனா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, யோகம்மா மற்றும் கனகம்மா, பொன்மலர், அருமைராசா (தங்கவடிவேல் - கனடா), ரேவதி அம்மா (பெற்றி - இத்தாலி), காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் இராசகிளி, நற்குணம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான திரவியம் (ஓய்வுபெற்ற அதிபர்), பொன்னுதிருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி மற்றும் செல்லத்துரை, சாரங்கம், வசந்தா, துரைராஜா (விஜயன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதீஸ், சந்துரு, வினோத், துஷாந் ஆகியோரின் பெரியதாயாரும், மிதுர்ஷா, நிருக்ஷனா, ஜதிக்ஷன், தஷ்வின், ஹரிஷ்னி, சருஷ்வின், ஜதிர்ஷன், டிலானி, சுயித்தா, சுயிந்தா, புகழரசி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 51, நொத்தாரிஸ் வீதி,**
**அரியாலை மேற்கு.**

**தகவல்:**
**பிள்ளைகள்**

(CS/21040)(11.17)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் மறைவு
13.03.1938 08.10.2018



(08.10.2018) அன்று
இறைபதம்
அடைந்த
அமரர்


## குழந்தைவேலு விஸ்வேஸ்வரன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 07.11.2018 அன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கோகுலம்"
சங்கத்தானை, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 08 . 02 . 1949
மறைவு 16 . 11 . 2017



## அப்பாத்துரை சரவணபவான்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடத்தி இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்டீர்கள்
காலங்கள் பல கடந்தாலும்
எங்கள் உயிருள்ளவரை எங்கள்
நினைவில் என்றும் நிலைத்திருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகாத்மா வீதி,
அளவெட்டி.
என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி சின்னத்துரை



பிறப்பு 18.08.1928 இறப்பு 05.11.2018

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசமணி சின்னத்துரை நேற்று (05.11.2018) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னத் தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத் துரையின் அன்பு மனைவியும் ஜெயசிங்கம், விஜயகுலசிங்கம் (முன்னாள் காரியதரிசி - NCY), ரேவதி பமிலா, ஜெயந்தி பிறேமிலா, ரேவதி ரெஜினா, ஜெயராஜசிங்கம் (காரியதரிசி - யாழ்ப்பாண வை.எம்.சி.ஏ) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி, இரட்னேஸ், காலஞ்சென்றவர்களான கோபாலகிருஸ்ணன் மற்றும் கணேசபாலன், விக்ரர் விஜயராஜா, சுகந்தி (ஆசிரியை - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, கண்மணி, கனகம்மா, அருமைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.11.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக நவாலி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.
தகவல்: குடும்பத்தினர்.
077 650 5580

# தீபத் திருநாளில் பன்னாட்டு இந்து குருமார் ஒன்றியத்தின் வாழ்த்து

தீபத் திருநாளாம் இன்றைய நாளில் திக்கெட்டும் வாழும் மக்கள் யாவருக்கும் எமது அன்பான வாழ்த்துக்கள். மக்கள் யாவரும் கல்விச் சிறப்புடனும் செல்வச் சிறப்புடனும் கலாசாரப் பண்புடனும் ஒளிமயமாய் வாழ பன்னாட்டு இந்துமதக் குருமார் ஒன்றியம் சார்பாக வாழ்த்துவதோடு நல்லாசிகளையும் மகிழ்வுடன் வழங்குகின்றோம் என்று இன்றைய தீபாவளித் திருநாளில் பன்னாட்டு இந்து குருமார் ஒன்றியம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

Galaxy Star
வெற்றி வாரம் 276 / திகதி 04.11.2018
வெற்றி இலக்கங்கள்
12 02 19 37 38
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1515
சீட்டிழுப்பு திகதி 05.11.2018
வெற்றி இலக்கங்கள்
42 43 66 69 P
அடுத்த வியாழகிழமை ஜக்பொட்
ரூ 20, 919, 404/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3105
திகதி: 2018.11.05
திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து
08 18 27 64 I
போனஸ் இலக்கம் 12
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
49,137,055/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 425
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.11.05
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 66,567,200/-
வெற்றி இலக்கங்கள்
12 25 45 72 P
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# சமுர்த்தி திணைக்களத்தினால் வீட்டுத் தோட்டப் போட்டிகள்

தென்மராட்சி, நவ.6

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளை ஊக்குவிக்கும் செயற்பாடாக அவர்களிடையே வீட்டுத் தோட்டப் போட்டிகளை சமுர்த்தி திணைக்களத்தினர் ஆரம்பித்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் பிரதேச சமுர்த்தி திணைக்களத்தினரால் சமுர்த்திப் பயனாளிகளுக்கிடையில் வீட்டுத் தோட்டப் போட்டியினை நடத்திவருகின்றனர். போட்டியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பயனாளிகள் விண்ணப்பித்துள்ளனர்..

பிரதேச கிராம அலுவலர் பிரிவு ரீதியான போட்டிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டு பிரதேச போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்திப் பயனாளிகளால் மேற்கொள்ளப்படும் வீட்டுத் தோட்டப் போட்டிகளில் கலந்து கொள்வோரை பிரிவு கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் பார்வையிட்டு முதலிடத்தைப் பெறுவோரின் விபரங்களை வழங்குவர் எனவும் இந்த 60 பேரின் வீட்டுத் தோட்டங்களை பிரதேச செயலர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் கொண்ட குழுவினர் பார்வையிட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுவோரின் பெயர்களை அறிவிப்பர்.

அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் போட்டியில் முதலிடம் பெறுவோருக்குத் தலா 5 ஆயிரம் ரூபாவும் பிரதேச நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே 15 ஆயிரம் ரூபா 10 ஆயிரம் ரூபா 5 ஆயிரம் ரூபா என ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (21.9.159)

# விழிநீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபர்
திரு. க.கிருஷ்ணகுமார்
அவர்களின் பாசமிகு மாமனார்
பண்டிதர்
**சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்**
அவர்கள் நேற்று (05.11.2018)
திங்கட்கிழமை இறைபதம்
அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/நெல்லியடி மத்திய கல்லூரி.

# மரண அறிவித்தல்

## பரராசசிங்கம் பாலசிங்கம்



தோற்றம் 14.09.1933 மறைவு 05.11.2018

மயிலிட்டி சென்.மேரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை கற்கோவளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பரராசசிங்கம் பாலசிங்கம் நேற்று (05.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2018) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பருத்தித்துறை கோரியடி மயானத்தில் பி.ப. 2.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

வேலையாள்கள் தேவை
பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாயில் அமைந்துள்ள
Food City ஒன்றுக்கு வேலையாள்கள்
தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
021 223 1355

வேலையாள்கள் தேவை
பாரம்பரிய உணவு உற்பத்தி மற்றும்
சந்தைப்படுத்தல் நிறுவனத்திற்கு
அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை.
சுன்னாகம், மல்லாகம் பிரதேசத்தில்
வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 076 2275 444

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம். கனடா PR, 21.10.1988, சதயநட்சத்திரம், கும்பராசி, கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்), உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணம் உடைய அழகிய படித்த மணமகள் தேவை. (மணமகன் கொழும்பு வந்துள்ளார்)
077 978 0205 (தந்தை)

## வாசிப்பு மாத போட்டிகளின் முடிவுகள்

கொடிகாமம், நவ.6
சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய்ப் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலக எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே "இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு" எனும் தொனிப் பொருளில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

**பிரிவு 1 தமிழ் வாசிப்பு போட்டி**
முதலாம் இடம் செ.அட்சயா (கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை)
இரண்டாம் இடம் சி.ரிவானிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை)
மூன்றாம் இடம் ஜெ.தேனுஜன் (கச்சாய் அ.த.க. பாடசாலை)

**பிரிவு 2 ஆங்கில வாசிப்பு போட்டி**
முதலாம் இடம் த.மீதுசா (கச்சாய் அ.த.க. பாடசாலை)
இரண்டாம் இடம் ச.சேனுஜா (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்)
இரண்டாம் இடம் க.நதுர்சனா (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் ச.விதுர்சனா (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்)

**பிரிவு 3 பேச்சு**
முதலாம் இடம் க.யதுர்சிகா (கச்சாய் அ.த.க. பாடசாலை)
முதலாம் இடம் கி.ஜெசிந்தினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
இரண்டாம் இடம் ஜ.ஜானுசன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் கு.டினோஜா (கச்சாய் அ.த.க. பாடசாலை)

**பிரிவு 4 பாட்டு**
முதலாம் இடம் த.தண்முகி (கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை)
இரண்டாம் இடம் ர.தனுக்சிகா (கொடிகாமம் அ.த.க பாடசாலை)
மூன்றாம் இடம் இ.ஷிதுர்சிகா (கெற்பேலி அ.த.க பாடசாலை)

**பிரிவு 5 பொது அறிவுப் போட்டி**
முதலாம் இடம் ந.தக்சன் (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்)
இரண்டாம் இடம் சி.யனுசியன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் ந.லக்சனா (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்)
மூன்றாம் இடம் இ.திலானிகா (கச்சாய் அ.த.க. பாடசாலை)

**பிரிவு 6 கட்டுரை**
முதலாம் இடம் இ.நிலோஜிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
இரண்டாம் இடம் இ.தரண்ஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் தே.சோபிதன் (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்)

**பிரிவு 6 சிறுகதை**
முதலாம் இடம் ஜெ.ஜெகானி (கச்சாய் அ.த.க. பாடசாலை)
இரண்டாம் இடம் ஜ.ஜானுசா (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் ப.சுஜிந்தா (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)

**சுவரொட்டிப் போட்டி**
**பிரிவு 1 தரம் 1,2,3**
முதலாம் இடம் க.ஜென்சிகா (கெற்பேலி அ.த.க. பாடசாலை)
இரண்டாம் இடம் பு.ரேனுஜன் (கச்சாய் அ.த.க. பாடசாலை)
மூன்றாம் இடம் லோ.வினுஜன் (கச்சாய் அ.த.க. பாடசாலை)
மூன்றாம் இடம் அ.தாரகா (போக்கட்டி அ.த.க பாடசாலை)

**பிரிவு 2 தரம் 4,5**
முதலாம் இடம் ஜெ.திவானுஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை)
இரண்டாம் இடம் ஜெ.லக்சிகன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை)
மூன்றாம் இடம் த.துவாரகன் (அல்லாரை அ.த.க பாடசாலை)

**பிரிவு 3 தரம் 6,7,8**
முதலாம் இடம் பு.காவிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
இரண்டாம் இடம் இ.மதுசன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் க.கஜித் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)

**பிரிவு 4 தரம் 9,10,11**
முதலாம் இடம் சா.லிகிதரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
இரண்டாம் இடம் நா.ஆகாஸ் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம் ஜெ.அருண் (அல்லாரை அ.த.க பாடசாலை)

**பிரிவு 5 தரம் 12,13**
முதலாம் இடம் ஐ.சயந்தினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) (ம-159.9)

### நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில்

# மரநடுகை மாதத்தை முன்னிட்டு குளக்கரைகளில் மருத மரங்கள்

**யாழ்ப்பாணம், நவ. 6**
**மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள குளக்கரைகளில் மருத மரக்கன்றுகளை நல்லூர் பிரதேச சபை நட்டு வைக்கவுள்ளது.**

பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் முப்பது வரையிலான குளங்கள் உள்ளன.
இந்தக் குளக்கரைகளில் மரங்கன்றுகளை நட்டு வைக்கும் நிகழ்வுகள் இந்த வாரத்தில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று பிரதேச சபைத் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார். மரக் கன்றுகளைத் தொடர்ந்து பராமரிக்கவும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-17)



## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 6
இளவாலை. வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் இன்று இடம்பெறவுள்ளன. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் மாலை 5.01 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. கலை, கலாசார நிகழ்வுகள், பரிசளிப்புக்கள் என்பனவும் இன்று இடம்பெறவுள்ளன. (ம)

# நல்லின விதைகள் வழங்கும் நிகழ்வு

கொடிகாமம், நவ. 6
உலக சிக்கன தினத்தை முன்னிட்டு கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையால் வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் விதமாக நல்லின விதைகள் வழங்கும் நிகழ்வு வங்கியின் முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர் திருமதி மணிவண்ணன் பரமேஸ்வரி, ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வி.நாகதேவன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வேதநாயகி இராஜகுமாரன், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் க.கார்த்திகேசு, மகளிர் கமக்கார அமைப்பின் தலைவர், விவசாய சம்மேளன பிரதிநிதிகள், வாடிக்கையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நல்லின விதைகள் வழங்கப்பட்டன. (ம-159)





மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இடர் முகாமைத்துவப் பிரிவால் இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு மருதங்கேணி பிரதேச செயலர் மு.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. (ம-160)



பொற்பதி மக்கள் நலன்புரிச் சங்க நிர்வாகத்தால் அம்பன் மாளிகைத்திடல் குடியிருப்பு விடிவெள்ளி சனசமூக நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக கிணறு அமைப்பதற்காகப் பத்துப் பைக்கட் சீமெந்து அண்மையில் வழங்கப்பட்டது. (ம)

## பூந்தளிர் அமைப்பின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 6
யாழ்ப்பாண மாவட்ட பூந்தளிர் மகளிர் அமைப்பின் பொதுக்கூட்டம் மருதனார்மடம் விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.
யாழ்ப்பாண மாவட்ட பூந்தளிர் மகளிர் அமைப்பின் தலைவி திருமதி ல.தர்மராஜினி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.
இந்தநிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத் தலைவர் கேமன் குமார கலந்து கொண்டார்.
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடக்கு - கிழக்கு இணைப்பாளர் த.அன்ரனிஜேசுதாசன், யாழ்மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தலைவர் இ.முரளீதரன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் இன்பநாயகம், வடமாராட்சி கிழக்கு பிரஜைகள் குழுத் தலைவர் த.காண்டீபன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-160)



## மேற்பார்வை செய்யப்படுகின்றன வடக்கு மாகாண முன்பள்ளிகள்

யாழ்ப்பாணம், நவ. 6
வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளை மேற்பார்வை செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாகாணக் கல்வி அமைச்சின் முன்பள்ளிப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 513 முன்பள்ளிகள் உள்ளன. இவற்றில் 2 ஆயிரத்து 701 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். மாகாண கல்வி அமைச்சால் தாயாரிக்கப்பட்ட முன்பள்ளிகள் நியதிச் சட்டத்துக்கு அமைவாகச் செயற்படுவது அவசியம். முன்பள்ளி வளாகம், வகுப்பறை, சுகாதாரம், போசாக்கு, கற்பித்தல் முறைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்ளடங்கலாக இந்த நியதிச் சட்டம் தயாரிக்கப்பட்டது.
முன்பள்ளியொன்று எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பான விடயங்கள் ஏற்கனவே வலயத்தின் ஊடாக முன்பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆகவே இது தொடர்பில் வலயக் கல்வி அலுவலகத்தால் மேற்பார்வை செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## அரசியல்...

விடுவிப்பது தொடர்பாக இன்னும் பேசவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச தரச தலைவராக இருந்த போதே அதிகமானவர்கள் அரசியல் கைதிகளாக சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் விடுவிக்கப்படாத நிலையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்று மைத்திரி அரச தலைவராகக் கொண்டுவரப்பட்டார். தற்போது மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. தற்போது மைத்திரியே தலைமை அமைச்சராக மகிந்தவை நியத்துள்ளார். அவர் தலைமை அமைச்சராக இருக்கும் போது அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் இன்னும் போசவுள்ளதாக அரச தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர் மாளிகையில் மேலும் தெரிவித்த அவர் தீபாவளியானது சமத்துவத்தை வலியுறுத்துகிறது. எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுவது போல நாட்டில் உள்ள அனைவரும் சமத்துவத்துடன் வாழ உரித்துடையவர்கள். இந்த விடையத்தில் நான் உறுதியாக உள்ளேன். சட்டமும், சகவாழ்வும் அனைவருக்கும், பொதுவானதாகவும், சமமானதாகவும் இருக்க வேண்டும், இந்தத் தீபாவளி தினத்தில் ஏற்படுகின்ற ஒற்றுமை இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கான வழிவகுக்க வேண்டும், நான் அரச தலைவராகத் தெரிவாகியமைக்கு தமிழ் மக்களின் அளப்பரிய பங்கு உண்டு என்பதை ஏற்றுக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார். அத்தோடு அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக தலைமை அமைச்சர் மகிந்தராஜபக்சவுடன் பேசியுள்ளேன். அடுத்த வாரம் சட்டமா அதிபர், மற்றும் துறைசார்ந்த நிபுணர்களை அழைத்துப் பேசவுள்ளேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இதன்போது அழைத்துப் பேசுவேன். இது தொடர்பான நல்ல செய்தியைத் தெரிவிப்பேன். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல் அடுத்த தீபாபளிக்கு முன் இந்தப் பிரச்சினைகளைத் தீரக்க முயற்சிப்பேன் என்றார். (21)

## பணிநிலை வெற்றிடம்

பதவி: **பெண், ஆண் சமையலாளர்**

குறிப்பு:

1. பெண் சமையலாளர் 30 வயதிற்கு மேல்
2. ஆண் சமையலாளர் 50 வயதிற்கு மேல்
3. இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. சம்பளம் நேர்முகத்தேர்வில் பேசித் தீர்மானிக்கப்படும்.
5. உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
6. விண்ணப்ப இறுதி திகதி 15.11.2018

**தலைவர்,**
**ஸ்ரீபரமானந்த இல்லம்,**
**வதிரி, கரவெட்டி.**
**021226 3136, 021226 5069**

(C 8254/35/17)

## நாடாளுமன்றத்தில்...

தேவையான 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று விட்டதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


புதிய அரசுக்கு ஆதரவு வழங்கும் விதத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற 'மக்கள் மகிமை' ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

முன்வைத்த காலை நான் ஒருபோதும் பின்வைக்கமாட்டேன். நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுவிட்டோம் என்று கூறினார்.

இதேவேளை மைத்திரி மகிந்த கூட்டுக்கு நேற்று மாலை வரையில் 105 நாடாளுமன்ற உறுப்பினர்களே ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.10)



# பக்கவாதம் வராமல் தவிர்க்க ....



- ⊗ குருதி அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கவேண்டும்.
- ⊗ புகைபிடிக்கும் பழக்கம் பக்கவாதத்துக்கான வாய்ப்பை அதிகமாக்கும்.
- ⊗ புகையானது குருதிக்குழாய் சுவரைத் தாக்குகிறது.
- ⊗ மதுஅருந்துவதும்பக்கவாதம் வருவதற்கானவாய்ப்பைஅதிகரிக்கும்.
- ⊗ சர்க்கரைநோய், உடலின்எல்லாப்பகுதியிலும்உள்ளஎல்லா வகைகுருதிக்குழாய்களையும் பாதிக்கும்.
- ⊗ உணவுப் பழக்கத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.
- ⊗ சமச்சீரான உணவைச் சாப்பிடவேண்டும்.
- ⊗ சிறுதானிய உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கலாம்.
- ⊗ உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
- ⊗ உங்கள்உயரத்துக்குஏற்றஎடையைப்பராமரியுங்கள்.
- ⊗ பக்கவாதம் வருவதற்கான அபாயத்துக்கு உட்பட்டவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது சர்க்கரை, கொழுப்பு, குருதி அழுத்தப்பரிசோதனைகளைச்செய்து கொள்ள வேண்டும்.

## கருப்பட்டியின் மருத்துவக் குணங்கள்

கருப்பட்டியைதேநீரில்கலந்துதினசரிஅருந்திவரலாம். சர்க்கரை நோயாளிகள் கூட கருப்பட்டி காபியை குடிக்கலாம். ஏனெனில் உடல்செயல்பாட்டிற்குஏற்றகார்போஹைட்ரேட்நிறைந்துள்ளதால் அதிககலோரிகள்இன்றிஉடல்ஆற்றலைஅதிகரிக்கசெய்கிறது. அதிக இரும்புச்சத்து நிறைந்துள் ளது. குருதிச் சோகை ஏற்படுவதையும்தடுக்கிறது.

கல்லீரலில் சேரும் நச்சுகளை வெளியேற்றி கல்லீரல் செயல்பாட்டைஅதிகரிக்கும். பருவம்அடைந்தபெண்களுக்குகருப்பட்டியையும், உளுந்தையும்சேர்த்து களிசெய்து கொடுப்பதன்மூலம் இடுப்பு எலும்பு வலு பெறுவதுடன், கருப்பைக்கு வலுவைத் தருகிறது.

கருப்பட்டியை உணவு உட்கொண்ட பின் சிறிய துண்டு எடுத்து சாப்பிட்டால்செரிமானசக்தியை தூண்டிஎளிதில்உணவுசெரிமானம் அடைய செய்கிறது. குடலின் இயக்கம் சீராகி மலச்சிக்கல் போன்றவை ஏற்படாதவாறு செயல்படுகிறது.

கருப்பட்டியில்உள்ளபொட்டாசியம்சத்து இதயஆரோக்கியத்தை பராமரிக்கசெய்கிறது. ரத்தஅழுத்தத்தைகுறைத்து அதன்மூலம் இதயபாதிப்புஏற்படாமல்தடுக்கிறது. அதுபோல்பொட்டாசியம்சத்து மூலம்நரம்புமண்டலமும் ஆரோக்கியம் பெறுகிறது.

கருப்பட்டியுடன் சீரகம் கலந்து பொடித்து உண்ணும்போது நல்ல பசிஏற்படுகிறது. குழந்தைகள்உணவுசாப்பிடாடல்அடம்பிடிக்கும் போதுசீரககருப்பட்டிஉருண்டையைசெய்துகொடுத்துவிடுங்கள் பிறகு குழந்தைகள் நன்றாக சாப்பிட ஆரம்பித்து விடும். காலசூழலில் கருப்பட்டி பயன்பாடு குறைந்து விட்ட போதிலும் தற்போது மீண்டும் கருப்பட்டிபலகாரங்கள் பலகடைகளில் கிடைக்க ஆரம்பித்துள்ளன.






## இது புதுசு

பெண்களுக்கான புதிய வடிவிலான ஆடைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவைஇரண்டாயிரத்து 890 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

### ரணில்...

குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்து, மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

அரச தலைவர் மைத்திரிபால தனது உரையில், ரணில் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையின் கீழ் வண்ணத்துப்பூச்சிகள் கும்பலொன்று நாட்டை ஆட்சி செய்தது, என்று கூறியிருந்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இந்தக் கருத்துக்கு கடும் விமர்சனங்கள் எழத்தொடங்கியுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால வண்ணத்துப்பூச்சிகள் என்ற சொல்லை பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை ஓரினச் சேர்க்கையாளர் என்று குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள மனித உரிமை ஆர்வலரும் ஊடகவியலாளருமான சுனந்ததேசப்பிரிய, வண்ணத்துப்பூச்சி என்று சிங்களத்தில் ஓரினச்சேர்க்கையாளர்களைஇழிவாககுறிப்பிடுவதுவழமை எனக் குறிப்பிட்டுள்ளார். (5)

### தீர்வு...

அரச தலைவர் மாளிகையில் நேற்று இடம்பெற்ற தீபாவளி தின நிகழ்வில் உரையாற்றும் போதே அரச தலைவர் சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட பொருளாதாரத்தீர்வுகள் அனைத்தும் நாடாமன்றத்துக்கே உரியவை, நாடாளுமன்றத்தில் தலையிடக்கூடிய அதிகாரம் எனக்கு இல்லை. ஆனால் கடந்த மூன்று வருடகாலமாக ரணில் தலைமையிலான அரசு இந்தப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எதுவித முன்னேற்றமும் எடுக்கவில்லை. நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் நான் பலமுறை ரணில் தலைமையிலான அரசுடன் பேசிய போதும் துரித கதியில் அது இடம்பெறவில்லை என்று அரச தலைவர் தெரிவித்துள்ளார். அத்தோடு அனைத்துப் பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் நான் இந்த அரசைக்கொண்டுவந்தேன். வடக்குமாகாணத்துக்குச் செய்யவேண்டியதைநான்முழுமையாகச் செய்வேன். தற்போது தனியார், அரச காணிகள் 90 வீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் வசமுள்ள கோவில்கள், பாடசாலைகளுக்கான காணிளை விடுவிக்குமாறு கூறியுள்னேன். ஏனைய காணிகளும் விடுவிக்கப்படும். வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணத்தான் அரச தலைவர் செயலணியை நியமித்தேன். 15 வருடகாலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் அந்தச் செயலணி மூலம் தீர்க்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (21,10)

### பலாத்காரமாக....

வாக்கெடுப்புநிலமைகளின்போதுஇணைந்து செயற்படுவதற்கும், மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீர்மானித்துள்ளன.

நாட்டில் எழுந்துள்ள மிகமோசமான அரசியல்நெருக்கடி தொடர்பில், மக்கள் விடுதலை முன்னணிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான அவசர சந்திப்பு கொழும்பில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில், கூட்டமைப்பின் சார்பில்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

அரசமைப்புக்கு முரணாக புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டமை, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அரசமைப்புக்கு முரணான இந்தவிடயங்களுக்குஎதிராகஒன்றிணைந்து போராடுவதுஎன்றுதீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இரண்டு கட்சிகளும் இணைந்து இந்த விவகாரங்களில் பணியாற்றலாம் என்பதுதொடர்பாகவிரிவாகஆராயப்பட்டுள்ளது. மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பேரம்பேசி அவர்களை விலைக்கு வாங்கும் செயற்பாடுகள் தொடர்பிலும் இரண்டு கட்சிகளும் ஆராய்ந்துள்ளன. ஜனநாயகவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள்விடுதலைமுன்னணிசார்பில்அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார, நிமால் ரட்நாயக்க மற்றும் லால் காந்த ஆகியோர் பங்கேற்றனர். (5,105)

### கட்சி தாவக்...

கொழும்பு, நவ. 6

கட்சி மாறுதல் என்பது சாதாரண விடயம். அதற்காக யாருக்காவது சன்மானங்கள் வழங்கப்படுமாக இருந்தால் அதனை இலஞ்சமாகக் கருதமுடியாது. அப்படியானால் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுவதும் இலஞ்மாகவே கருதப்படவேண்டும் என்று தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்றுநடத்தியசெய்தியாளர்சந்திப்பில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கட்சி தாவுதற்கு பெருமளவு பணம் வழங்கப்படுவதாக ஆதாரங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி தகவல் வெளியிட்டிருந்தது. அரச தரப்பு அதனை மறுத்திருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தரப்பு அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமக்கு பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் நாங்கள் கோரியுள்ளோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட்டமைப்பின் தலைவருடன் இது தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். அவர்களின் கோரிக்கைகளில் எங்களால்நிறைவேற்றமுடியுமானவிடயங்களை செய்துகொடுக்கத் தயாராக இருக்கின்றோம். பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் மத்திய வங்கி ஊழல் மோசடியுடன் தொடர்ப்புபட்ட எவரையும் எம்முடன் இணைத்துக் கொள்ளப்போவதில்லை என்றார். (5)

### தமிழ்...

இணைந்து ஏற்பாடு செய்திருந்த ‘மக்கள் பலம்’ போராட்டம் கொழும்பு நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த வாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுடன் பேசிய மைத்திரிபால, தான் உயிருடன் இருக்கும் வரையில் வடக்கு-கிழக்குஇணைப்போ.கூட்டாட்சியோ வழங்கமாட்டேன் என்று குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்றைய தினம் மேற்கண்டவாறு உரையாற்றியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது நாட்டு அடித்தட்டு மக்களின் இன்ப துன்பங்களையும், கலாசாரத்தை அறியாது பன்னாட்டுச் சமூகத்தின் நிகழ்ச்சி நிரலின் கீழ் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டிருந்தார். அவருடன் தொடர்ந்து பயணிக்க முடியாது என்பதால்கருஜயசூரிய அல்லது சஜித்பிரேமதாசவை தலைமை அமைச்சராக நியமிப்பதற்கு அவர்களுடன் பேச்சுகள் நடத்தினேன். ஆனால், தலைவருடன் மோத முடியாது என்று கைவிரித்ததால்தான் ரணில் விக்கிரமசிங்கவை கவிழ்க்க மகிந்த ராஜபக்சவைத்தலைமைஅமைச்சராகநியமித்தேன். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் நானும் மகிந்த ராஜபக்சவும் ஒரே மேடையில் மீண்டும்இணைந்துள்ளோம். அதற்காகசந்தோசமடைகின்றேன். நவம்பர் மாதம் என்பது எமது நாட்டில் முக்கியமான மாதமாகும். 2014ஆம்ஆண்ட நவம்பர்மாதம்தான் சுதந்திரக் கட்சியை விட்டுவெளியேறி பொது வேட்பாளராக களமிறங்கினேன்.

நான் தலைமை அமைச்சர் கதிரையிலிருந்து இரண்டு உருவங்களையோ அல்லது இரண்டு மனிதர்களையோ மாற்றவில்லை. பன்னாட்டுச்சமூகத்தின் நிகழ்ச்சிநிரலின் கீழ் செயற்பட்ட தோற்றத்தையே மாற்றியமைத்துள்ளேன். எமது நாட்டுக்கும் தேசிய கலாசாரத்துக்கும், வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலை நிராகரிப்பவரையுமே தலைமை அமைச்சராக நியமித்துள்ளேன்.

கடந்தமூன்றரை ஆண்டுகளாக முடிவுகளை எடுத்தது அமைச்சரவை அல்ல. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கதான்.

நான் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கும் தீர்மானத்தை சட்டநிபுணர்களுடன் கலந்து பேசியே முடிவெடுத்தேன்.


இந்தியாவுடனான எனது உறவைச் சீர்குலைக்க ரணில் விக்கிரமசிங்க சதி செய்கின்றார். அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்பட்டதாக ஒரு தவறான தகவலை அவர்களே வெளியில் கசியவிட்டனர். மக்கள் பலத்துடன் விளையாடவேண்டாம் என்று நான் அவருக்குச்சொல்கின்றேன்.

வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நானும், புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மூன்றுதசாப்தகாலபோரில்பாதிக்கப்பட்ட வடகிழக்கில் 50ஆயிரம் வீடுகளை அமைப்பதில் கடந்த மூன்றரை வருடகாலமாகப் பெரும் முரண்பாடுகள் காணப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களின் இழுபறியினால் இதுவரை ஒருவீடுகூட அங்குகட்டப்படவில்லை - என்றார். (5,10)

# ‘மாதுளை’

## ஊட்டச்சத்துக்களின் இருப்பிடம்

சு.மாலினி



‘புனிகேசியே’ குடும்பத்தைச் சார்ந்த மதுளை, ஈரான் நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட தாவரமாக விளங்குகிறது. இந்தத் தாவரம்தமிழில்‘மாதுளை’ எனப் பெயர் குறிப்பிடப்படு கிறது. மருத் துவக் குணங்களை அதிகம் கொண்டுள் ளது. மாதுளம்பழம் வேறு எந்தப் பழங் களிலும் இல்லாத ஊட்டச் சத்துகளை நிறைவாக கொண்டுள்ளது.
அலங்காரத் தாவரமாகவும் சிறப்புறு கிறது.புளிப்புக் கலந்த, இனிப்புச் சுவை யான, கவரக்கூடிய அதன் மேல்வளரியா னது ஒரு பழமாக நுகரப்படுகி றது. மாது ளையில் இருந்து உணவுப் பொருள்கள் தவிர்ந்து அழகுசாதனப் பொருள்கள் மற்றும் நிறமூட்டிகள் தயாரிக்கப்ப டுகின்றன.


**மருத்துவப் பயன்பாடு**

மாதுளையின், ‘பூ, இலை, பட்டை, காய், மற்றும் வேர்’ என அனைத்துப் பகுதிக ளுமே ஆயுள்வேத மருத்துவ முறையில் முதன்மை இடத்தைப் பெற்றுக்கொண் டுள்ளது.

•மாதுளை வேரையும் பட்டையையும் அவித்து, அந்த நீரைக் கொண்டு காயங் களைச் சுத்தம் செய்யலாம்.

•கண் நோய் ஏற்படும் போது மதுளம் இலையை அவித்து, அந்த நீரைப் பயன் படுத்தி கண்களை கழுவலாம்.

•உணவுச் சமிபாடின்மை, வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி போன்ற வற்றுக்கு மருந்தாக அமைகிறது.



•அதிக குருதிப் போக்கு மற்றும் வயிற்றோட்டம் ஏற்படும் போது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மாதுளம் மரப்பட்டையை அவித்துப் பருகலாம்.

**மண்வளமும் காலநிலையும்**

மாதுளை எல்லா வகையான மண்களிலும் வளரக்கூடியது. வறட்சியையும்,பனிப் பொழிவையும் தாங்கி வளரக் கூடிய தாவரமாகவும் இது விளங்குகிறது.

**சத்தூட்டம்!**

அதிக போசணை நிறைந்த, உயர்தர மான மாதுளை மக்களிடையே ஒரு மருத்துவப் பொருளாக பயன்படுத்தப் பட்டு வருகிறது. மாதுளை நீரில் கரை யாத நார்ச் சத்தை அதிகளவில் கொண் டுள்ளது.இந்தத் தன்மை உணவு சமி பாட்டைச் சீர்ப்படுத்துவதோடு, குடலிலும் இலகுவாக அசையும்.உடல் நிறையை குறைப்பதற்கும்,கொழுப்பைக் கட்டுப்ப டுத்துவதற்கும் உதவுகிறது.

மாதுளையைத் தினந்தோறும் உண்ப தால் நாளாந்த விற்றமின் ‘சி’ தேவைப் பாட்டின் 17 வீதம் பூர்த்தி செய் யப்படுகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியும், குருதிச் சுற்றோட்டமும் அதிகரிக்கிறது.

மாதுளையிலுள்ள நீரில் கரை யும் தன்மையுடைய ‘தனின்’ மற்றும் ‘பிளேவனொயிட்’ கார ணமாக இதய நோய் ஆபத் துக்கள் குறையு ம்,குருதிய முத்தம் கட்டுப்பாட்டில் இருக் கும். புற்றுநோய்க்கு மாது ளைச்சாறு உகந்தது.அத்து டன் புதிய புற்று நோய்க்கலங் கள் உருவாகும் வேகத்தை குறைப்பதுடன், கலங்கள் சிதைவடைவதையும் தூண் டுகிறது.

**இனப்பெருக்கம்**

விதைகள் மற்றும் பதிய முறை மூலம் மாதுளையை இனப் பெருக்கம் செய்ய லாம். விதைகள் மூலமே அதிகளவு தாவ ரங்கள் இனப் பெருக்கம் செய்யப்படு கின்றன.
மாதுளையில் அதிகளவான தன்மகரந் தச் சேர்க்கை இடம்பெற்றாலும், அயன் மகரந்தச் சேர்க்கையும் நடைபெறுவதற் கான வாய்ப்புக்கள் உள்ளன. ‘வேர் விட்டத் துண்டங்கள்’ மற்றும் ‘காற்றுப் பதியம்’ மூலமும் தாய்த் தரவரத்தை ஒத்த இனங்களை இனப் பெருக்கம் செய்யமுடியும்.

**பயிரிடல்**

ஆரம்ப காலங்களில் வீட்டுத் தோட்டப் பயிராக செய்கை பண்ணப்பட்ட மாதுளை, தற்போது வர்த்தக ரீதியிலும் பயிரிடப்படுகிறது. ஏக்கரொன்றில் ‘3 மீற்றர்x3 மீற்றர்’ இடைவெளி கொண்டு 400‘மரங்களை நடுகை செய்யலாம். மழைக்கால ஆரம்பத்துடன் நாற்றுக் களைநடுகை செய்வது சிறப்பனதாகும்.

மாதுளையில் இருந்து அதிகவிளைச்ச லைப் பெற்றுக் கொள்வதற்கும்,மரத்துக் குச் சிறந்த தோற்றத்தை வழங்குவதற் கும் மாதுளைத் தாவரம் வளரும் காலத்தில் இருந்தே சிறந்த பராமரிப்பை வழங்க வேண்டும்.மரத்தை முறையா கப் பயிற்றுவிக்க வேண்டும். மேலும் மாதுளையின் முதன்மைத் தண்டுக ளில் 3 தொடக்கம் 4 தண்டுகள் வரை வளர இடமளிக்க வேண்டும்.
முதன்மைத் தண்டுகள் 2 அடி உயரம் வளர்ச்சியடைந்ததும், நுனியரும்புகளை அகற்றிக் கிளை கொள்வதனை ஊக்கிவிக்க வேண்டும். ஒவ்வொரு அறுவடை காலத்தின் பின் னரும் நீர் வாதுக்கள்,தேவையில்லாத கிளைகள், கீழ் நோக்கிச் சரியும் கிளை கள் மற்றும் ஒட்டுண்ணித் தாவரங்கள் என்பனவற்றை அகற்ற வேண்டும். இந்தச் செயன்முறைகள் மாதுளைச் செய்கையில் முதன்மையான பயிர் வளர்ப்புநடைமுறைகளாகப் பின்பற்றப் பட வேண்டும்.

ஆரம்ப காலங்களில் வீட்டுத் தோட்டப் பயிராக செய்கை பண்ணப்பட்ட மாதுளை, தற்போது வர்த்தக ரீதியிலும் பயிரிடப்படுகிறது. ஏக்க ரொன்றில் ‘3 மீற்றர் 3 மீற்றர்’ இடைவெளி கொண்டு 400 மரங்களை நடுகை செய்யலாம். மழைக் கால ஆரம்பத்துடன் நாற்றுக் களை நடுகை செய்வது சிறப்பனதாகும். மாதுளையில் இருந்து அதிகவிளைச்சலைப் பெற் றுக் கொள்வதற்கும்,மரத்துக் குச் சிறந்த தோற்றத்தை வழங்குவதற்கும் மாதுளைத் தாவரம் வளரும் காலத்தில் இருந்தே சிறந்த பராம ரிப்பை வழங்க வேண்டும். மரத்தை முறையாகப் பயிற் றுவிக்க வேண்டும். மேலும் மாதுளையின் முதன்மைத் தண்டுகளில் 3 தொடக்கம் 4 தண்டுகள் வரை வளர இடமளிக்க வேண்டும்.



**அறுவடை**

இவற்றிலிருந்து வருடம் முழுவதும் பழங்களைப் பெற் றுக் கொள்ள முடிவ துடன், வருடத்தின் மத்திய காலப் பகுத யில் அதிகளவு பழங் களை அறுவடையா கப் பெற்றுக்கொள்ள முடியும். பூக்கள் உருவாகி 4 மாதங்க ளில் பழங்களைப் பெற்றுக் கொள்ள லாம்.

இந்தப் பழத்தை நேரடி உணவாக்கிக் கொள்ளலாம். தவிர, ஏனைய பழங்களுடன் பழக்கல வையாகவும், பழச்சாறாகவும்,‘வைண்’ பானமாகவும் அருந்தலாம்.

*கட்டுரையாளர்: பாடவிதான உத்தியோகத்தர் (பூங்கனியியல்), பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், முல்லைத்தீவு.*

## ஆனந்தன்...

ஈ.சரவணபவன், மகிந்த பக்கம் போகாமல் இருப்பது குறித்து உங்கள் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலை மக்களுக்குப் பகிரங்கமாக வெளியிட முடியுமா? என்று சவால்விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகிய நான் மகிந்த பக்கம் தாவுவதற்காக அவருடன் பணம், அமைச்சுப் பதவி என்பவற்றுக்குப் பேரம் பேசினேன் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் கூறிய கருத்துக்கள் சில ஊடகங்களில் வெளியாகி இருந்தன. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டு மானபங்கம் ஏற்படுத்தியமைக்காகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன். மேலும் அவர் கூறியமைக்கான பதிலை மக்கள் முன்வைக்க விரும்புகின்றேன் என்று தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**வதந்தி**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்போதைய அரசியல் குழப்ப நிலையில் நான் மகிந்த பக்கம் தாவுவேனா இல்லையா என்கிற சந்தேகம் மக்களுக்கு இருக்கக்கூடும். முன்னாள் கொலைகார இயக்கத்தைச் சேர்ந்த சிலர் தம்மைப்போலவே பிறரையும் கருதி உருவாக்கிவிட்ட வதந்தி அது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறுவதைப் போன்று மகிந்த பக்கம் செல்வது பற்றிச் சிந்திப்பதைக்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வாழ்வில் ஒருபோதும் கொள்கையைக் கைவிட்டு வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும் விலைபோகக் கூடியவன் நான் அல்ல. அத்தகையவனாக இருப்பேனாகில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் நிதி இழப்புக்கும், பொருள், சொத்திழப்புக்கும் மத்தியில் எனது பத்திரிகையை நடத்தியிருக்கவேண்டிய அவசியம் ஏதுமில்லை.

**போலித் தேசியம்**

இத்தனை ஆண்டு காலங்களில் தமிழ் மக்களுக்குத் தமிழ்த் தேசியம் குறித்து எனது பத்திரிகை எதைக் கூறியதோ எதைச் சொல்லியதோ அதுவே எனது என்றென்றைக்கும் மாறாத ஒரே கொள்கை.

தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு, விடுதலை இயக்கமாக உருவாகிப் பின்னர் தமது சொந்த மக்களையே கொன்று குவித்தும், கடத்திக் கப்பம் வாங்கியும் பிழைப்பு நடத்திய ஈபிஆர்எல்எவ் கட்சியைச்சேர்ந்தவர்களுக்கு, கொண்ட கொள்கையில் இருந்து தவறி விழுவதும் போலித் தேசியம் பேசிக் கொண்டே சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் கொஞ்சிக் குலாவுவதும் சாதாரணமான விடயமாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள் கடந்த காலங்களிலும் இதுபோன்ற மக்கள் துரோகச் செயல்களைப் புரிந்து பழக்கப்பட்டவர்கள்.

ஆனால், நான் இந்த மண்ணிலேயே கடந்த 30 ஆண்டுகளாக மக்களோடு மக்களாக இருந்து சிங்கள, பௌத்த பேரினவாதத்தை எதிர்த்து தமிழ்த் தேசியத்தின் ஆணிவேராக ஒரு பத்திரிகையை நடத்தி நின்றவன். ஒரு சில கோடிகளும் அமைச்சுப் பதவிகளும் என் கால் தூசுக்குப் பெறா. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் மூலம் வரும் பணத்தை எதிர்பார்த்து வாழும் நிலையை ஆண்டவன் எனக்கு ஒருபோதும் வைத்ததுமில்லை.

**கூலிப் படையினர்**

அமைச்சுப் பதவிக்கும், பணத்திற்கும், பத்திரிகையை நடத்துவதற்கான வசதிகளுக்காகவும் நான் மகிந்தவுடன் பேரம் பேசினேன் என்று வெட்கங்கெட்டத்தனமாக சிவசக்தி ஆனந்தன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய குரல் பதிவில் தெரிவித்திருக்கிறார். உண்மையில் மகிந்தவுடன் பேரம் பேசியவர்கள் இவர்கள்தான். பின்னர் ரணிலுடனும் பேரம் பேசித் தமது கட்சித் தாவலைத் தள்ளிப் போட்டிருப்பவர்களும் இவர்கள்தான். பணத்துக்காகக் கூலிப் படையாகிக் கொலை செய்வதும், ஆள்களைக் கடத்தி கப்பம் கேட்டுப் பணம் பறிப்பதும் இவர்களுக்குப் புதியதல்ல.

ஆயுதங்களைக் காட்டி மக்களை மிரட்டி அதிகாரம் செலுத்தியவர்களும் இவர்கள்தான். எந்த வழியிலாவது பணத்தையும் பதவியையும் அடையலாம் என்கிற வழியில் பழக்கப்பட்டவர் தன்னைப் போலவே என்னையும் நினைத்துவிட்டார் போலிருக்கிறது.

நான் பணத்துக்கும் பதவிக்கும் விலைபோபவன் அல்லன் என்பதை வடக்கு முழுவதும் இருக்கும் மக்களில் எவரைக்கேட்டாலும் சொல்வார்கள் என்பதை அவருக்கு ஆணித்தரமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேன். அரச தலைவரை எனது வீட்டுக்கு அழைத்தேன், அமைச்சர்களுக்கு விருந்து கொடுத்தேன் என்பதற்காக நான் அவர்களோடு இணங்கிப் போவேன் என்று நினைத்தது சிவசக்தி ஆனந்தனின் அறியாமையின் அறிவுமட்டம். எனது கட்சி நாட்டின் தலைவர்களோடு சேர்ந்து ஒரு தீர்வைப் பெற இணக்கமான முறையில் முயன்று வந்தபோது அதற்கு உந்துசக்தியாக இருக்கும் வகையில் வாய்ப்புகளை உருவாக்கி அரச தலைவரையும், அமைச்சர்களையும் அழைத்துப் பேசி என்னால் முடிந்தவரையில் தமிழ் மக்களின் தேவைகளையும் போராட்ட நியாயங்களையும் புரிய வைக்க முயன்றிருக்கின்றேன். ஆனால், கட்சிக்கோ எனது தலைவர்களுக்கோ துரோகம் இழைக்க நினைத்ததில்லை.

**துரோகம்**

ஆனால், சிவசக்திஆனந்தனும் அவரது கட்சித் தலைவரும் தமது கட்சியிலிருந்த மூத்த தலைவர்களுக்கு செய்த துரோகங்களைப் பற்றி ஈபிடிபியினரைக் கேட்டால் விலாவாரியாகச் சொல்வார்கள். அப்படிப்பட்டவர், என்னை நோக்கிக் கை சுட்டிப் பேசவே தகுதியற்ற ஒருவர், நான் கட்சி தாவப் போகிறேன் என்று தெரிவித்ததை மக்கள் ஒருபோதும் நம்பத் தயாராயிருக்கவில்லை என்பதை அவர் இத்தனை நாள்களுக்குள் புரிந்துகொண்டிருப் பார்.

சிவசக்தி ஆனந்தன் இப்படிப் பொய் சொல்வது ஒன்றும் இது முதல் தடவையல்ல. தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலிடம் இருந்து 2 கோடி ரூபா பெற்றுவிட்டார்கள் என்று இவர் கூறிய பொய்யும் ஆடிய பித்தலாட்டமும் மக்கள் மனதில் இன்னமும் நீங்காமலேயே இருக்கின்றன. இதனால் சிவசக்தி ஆனந்தன் கூறுவதெல்லாம் பொய் தவிர வேறில்லை என்பதை உய்த்தறிய மக்களுக்கு அதிக நேரம் தேவைப்படாது.

**சவால்**

சிவசக்தி ஆனந்தனைப் பார்த்து என்னுடைய ஒரேயொரு கேள்வி இதுதான், மகிந்த பக்கம் போகாமல் இருப்பது குறித்து உங்கள் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலை மக்களுக்குப் பகிரங்கமாக வெளியிட முடியுமா? அதை வெளியிட்டால் போதுமே உங்கள் பேரம் என்ன என்பதை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு.

நான் பணம் பெறப்போகின்றேன் என்று பொய் சொன்ன சிவசக்திஆனந்தனால், உங்கள் கட்சித் தலைவர் ரணிலுடன் பேரம் பேசவில்லை என்று நிரூபிக்க சுரேஸ்பிரேமச்சந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையிலான உரையாடலை வெளியிட முடியுமா? இதுதான் என் சவால் என்றுள்ளது. (5)

## தமிழ்பேசும்...

றேன். நீங்கள் என்னை நம்பலாம். இந்த அரசுடன் இணைந்து பயணிக்க சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தமிழில் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் பேரணியில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். சிங்கள மொழியில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச, எழுதப்பட்ட உரையைப் பார்த்துப் பார்த்து தமிழில் வாசித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் பணி புரிந்து அந்த அரசை வீழ்த்தி இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை எடுக்க அரச தலைவருக்கு மூன்றரை வருடங்கள் சென்றுள்ளன. நாங்கள் இருவரும் விலகியிருந்தோம். இருவரும் ஒருவருக்கு ஒருவர் சாடிக்கொண்டோம். தேர்தல் ஒன்றுக்கும் முகங்கொடுத்தோம். அதில் மக்கள் தீர்மானம் எடுத்தனர். மக்கள் தீர்ப்பின் பிரகாரம் அரச தலைவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். அரச தலைவரின் பதவி மிகவும் பொறுப்புமிக்க பதவி. நான் அரச தலைவராக இருந்திருந்தால் இவ்வாறான தீர்மானத்தை எடுத்திருக்க மாட்டேன். பணிபுரிவதில் எமக்குச் சிக்கல் இல்லை. நாங்கள் இருவரும் 1970ஆம் ஆண்டுகளில் இருந்து ஒன்றாகப் பயணித்துள்ளோம். நாட்டுக்காகவே இருவரும் ஒன்றிணைந்தோம்.

எமது நாட்டின் எதிர்காலத்தையும், எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் வெளிநாடுகளுக்கு கூறுப்போடுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாததாலும், மக்களுக்கு வரிச் சுமைகளைச் சுமத்தியதாலும், தினம் தினம் நாட்டைப் படுகுழியில் தள்ளியதாலேயேயும் இருவரும் ஒன்றிணைந்துள்ளோம்.

அத்தியவசியப் பொருள்கள் மற்றும் பெற்றோல், டீசல் விலைகளை என்னால் ஒரே நாளில் குறைக்க முடிந்தது. ஆனால், அவர்களால் அதனைச் செய்ய முடியவில்லை. மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளானாலும், சுகபோகத்தை அனுபவிக்கவே அவர்கள் எண்ணினர்.

நாட்டைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு கூறுபோடுவதில் இருந்து மீட்டு அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டுசெல்லுவோம். ஜனநாயகத்தைப் பாதுகாத்து பன்னாட்டுச் சமூகத்துடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். எம் இருவரின் ஒற்றுமையை மீண்டும் எந்தக் காரணத்துக்காகவும் பிரிக்க இடமளிக்கமாட்டோம் - என்றார். (5,10)

## அடுத்த...

